# Padasalai's
## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET


- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

www.Padasalai.Net www.TrbTnpsc.com




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# செலக்சன்

## ஆறாம் வகுப்பு

## 6

# தமிழ்

## முப்பருவங்களும் இணைந்தது

முதல் பருவம் + இரண்டாம் பருவம் + மூன்றாம் பருவம்


94430 43338
94430 46662

வெளியிடுபவர்

**அன்பு நிலையம்**

15, புதுமண்டபம், மதுரை-625001.


**விலை ₹ 140.00**

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


# பொருளடக்கம்

## தமிழ்

## முதல்பருவம்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | மொழி | மனப்பாடப்பகுதி * | 5 |
| 1. | தமிழ்த்தேன் | 1.1 இன்பத்தமிழ் * | 7 |
| | | 1.2 தமிழ்க்கும்மி | 12 |
| | | 1.3 வளர்தமிழ் | 16 |
| | | 1.4 கனவு பலித்தது | 21 |
| | | 1.5 தமிழ் எழுத்துக்களின் வகை தொகை | 24 |
| | | 1.6 மொழியை ஆள்வோம் | 26 |
| | | 1.7 மொழியோடு விளையாடு | 30 |
| | | 1.8 கட்டுரை | 32 |
| | | கடிதம் | 33 |
| 2. | இயற்கை இன்பம் | 2.1 சிலப்பதிகாரம் * | 34 |
| | | 2.2 காணிநிலம் * | 38 |
| | | 2.3 சிறகின் ஓசை | 42 |
| | | 2.4 கிழவனும் கடலும் | 46 |
| | | 2.5 முதலெழுத்தும் சார்பெழுத்தும் | 49 |
| | | 2.6 மொழியை ஆள்வோம் | 50 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 52 |
| | | 2.8 திருக்குறள் * | 55 |
| 3. | அறிவியல், தொழில்நுட்பம் எந்திர உலகம் | 3.1 அறிவியல் ஆத்திசூடி | 58 |
| | | 3.2 அறிவியலால் ஆள்வோம் | 61 |
| | | 3.3 கணியனின் நண்பன் | 65 |
| | | 3.4 ஒளி பிறந்தது | 68 |
| | | 3.5 மொழி முதல், இறுதி எழுத்துகள் | 70 |
| | | 3.6 மொழியை ஆள்வோம் | 72 |
| | | 3.7 மொழியோடு விளையாடு | 74 |
| | | 3.8 கட்டுரை | 78 |
| | | கடிதம் | 80 |


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# இரண்டாம்பருவம்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | கல்வி கண்ணெனத் தகும் | மனப்பாடப்பகுதி * | 82 |
| | | 1.1 மூதுரை* | 84 |
| | | 1.2 துன்பம் வெல்லும் கல்வி | 87 |
| | | 1.3 கல்விக்கண் திறந்தவர் | 93 |
| | | 1.4 நூலகம் நோக்கி... | 97 |
| | | 1.5 இன எழுத்துக்கள் | 100 |
| | | 1.6 மொழியை ஆள்வோம் | 101 |
| | | 1.7 மொழியோடு விளையாடு | 106 |
| | | 1.8 கட்டுரை | 110 |
| | | கடிதம் | 111 |
| 2. | நாகரிகம், பண்பாடு பாடறிந்து ஒழுகுதல் | 2.1 ஆசாரக்கோவை | 113 |
| | | 2.2 கண்மணியே கண்ணுறங்கு | 116 |
| | | 2.3 தமிழர் பெருவிழா | 120 |
| | | 2.4 மனம் கவரும் மாமல்லபுரம் | 125 |
| | | 2.5 மயங்கொலிகள் | 129 |
| | | 2.6 மொழியை ஆள்வோம் | 132 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 135 |
| | | 2.8 திருக்குறள் * | 137 |
| | | 2.9 கட்டுரை | 142 |
| | | கடிதம் | 144 |
| 3 | தொழில் வணிகம் கூடித் தொழில் செய் | 3.1 நானிலம் படைத்தவன் | 145 |
| | | 3.2 கடலோடு விளையாடு * | 149 |
| | | 3.3 வளரும் வணிகம் | 154 |
| | | 3.4 உழைப்பே மூலதனம் | 158 |
| | | 3.5 சுட்டெழுத்துக்கள், வினா எழுத்துக்கள் | 161 |
| | | 3.6 மொழியை ஆள்வோம் | 164 |
| | | 3.7 மொழியோடு விளையாடு | 166 |
| | | 3.8 கட்டுரை | 169 |
| | | கடிதம் | 171 |


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மூன்றாம் பருவம்


| இயல் | | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி * | 173 |
| 1 | நாடு, சமூகம் | 1.1பாரதம் அன்றைய | |
| | அரசு, நிருவாகம் | நாற்றங்கால்* | 175 |
| | புதுமைகள் | 1.2 தமிழ்நாட்டில் காந்தி | 181 |
| | செய்யும்தேசமிது | 1.3 வேலுநாச்சியார் | 185 |
| | | 1.4 நால்வகைச் சொற்கள் | 190 |
| | | 1.5 மொழியை ஆள்வோம் | 193 |
| | | 1.6 மொழியோடு விளையாடு | 199 |
| | | 1.7 கடிதம் | 201 |
| 2 | அறம்,தத்துவம் | 2.1 பராபரக் கண்ணி* | 202 |
| | சிந்தனை | 2.2 நீங்கள் நல்லவர் | 205 |
| | எல்லாரும் இன்புற | 2.3 பசிப்பிணி போக்கிய பாவை | 208 |
| | | 2.4 பாதம் | 215 |
| | | 2.5 பெயர்ச்சொல் | 218 |
| | | 2.6 மொழியை ஆள்வோம் | 220 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 223 |
| | | 2.8 திருக்குறள்* | 227 |
| | | 2.9 கடிதம் | 230 |
| 3 | மனிதம், | 3.1 ஆசிய ஜோதி | 231 |
| | ஆளுமை | 3.2 மனிதநேயம் | 236 |
| | இன்னுயிர் | 3.3 முடிவில் ஒரு தொடக்கம் | 241 |
| | காப்போம் | 3.4 அணி இலக்கணம் | 243 |
| | | 3.5 மொழியை ஆள்வோம் | 245 |
| | | 3.6 மொழியோடு விளையாடு | 251 |
| | | 3.7 கடிதம் | 255 |


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 6. தமிழ்

## மனப்பாடப்பகுதி

## முதல்பருவம்

### இன்பத்தமிழ்

*தமிழுக்கும் அமுதென்று பேர் ! – அந்தத்*
*தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர் !*

*தமிழுக்கு நிலவென்று பேர் ! – இன்பத்*
*தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர் !*

*தமிழுக்கு மணமென்று பேர் ! – இன்பத்*
*தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர் !*

**– பாரதிதாசன்**

Padasalai

### சிலப்பதிகாரம்

*திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்*
*கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்றுஇவ்*
*அங்கண் உலகு அளித்த லான்*

*ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்*
*காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு*
*மேரு வலம் திரிதலான்*

*மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்*
*நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்*
*மேல்நின்று தான் சுரத்தலான்*

**– இளங்கோவடிகள்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**காணி நிலம்**

*காணி நிலம் வேண்டும் – பராசக்தி*
*காணி நிலம் வேண்டும் – அங்குத்*
*தூணில் அழகியதாய் – நன்மாடங்கள்*
*துய்ய நிறத்தினதாய் – அந்தக்*
*காணி நிலத்திடையே – ஓர் மாளிகை*
*கட்டித் தரவேண்டும் – அங்குக்*
*கேணி அருகினிலே – தென்னைமரம்*
*கீற்றும் இளநீரும்*
*பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம்*
*பக்கத்திலே வேணும்*

*– பாரதியார்*

**திருக்குறள்**

1. *கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே*
   *எடுப்பதூஉம் எல்லாம் மழை*

2. *ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்*
   *சான்றோன் எனக்கேட்ட தாய்*

3. *அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
   *என்பும் உரியர் பிறர்க்கு*

4. *இனிய உளவாக இன்னாத கூறல்*
   *கனியிருப்பக் காய்கவர்ந் தற்று*

*– திருவள்ளுவர்*

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com


# செலக்சன்
# 6 தமிழ்
# முதல் பருவம்

**இயல் ஒன்று** 1. தமிழ்த்தேன்

## கவிதைப்பேழை

**இயல் ஒன்று** 1.1. இன்பத்தமிழ்

### மனவரைபடம்




### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஏற்றத் தாழ்வற்ற ........... அமைய வேண்டும்.**

அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு **விடை : அ) சமூகம்**

**2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ............. ஆக இருக்கும்**

அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி

**விடை : ஈ) அசதி**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..............**

அ) நிலயென்று ஆ) நிலவென்று
இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று

**விடை : ஆ) நிலவென்று**

**4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ...........**

அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள்
இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள்

**விடை : ஆ) தமிழெங்கள்**

**5. "அமுதென்று" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று
இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று

**விடை:ஆ) அமுது+என்று**

**6. "செம்பயிர்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர்
இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்

**விடை:அ) செம்மை + பயிர்**

**இன்பத்தமிழ் – பாடலின்கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1) விளைவுக்கு | – | பால் |
| 2) அறிவுக்கு | – | வேல் |
| 3) இளமைக்கு | – | நீர் |
| 4) புலவர்க்கு | – | தோள் |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1) விளைவுக்கு** | **–** | **நீர்** |
| **2) அறிவுக்கு** | **–** | **தோள்** |
| **3) இளமைக்கு** | **–** | **பால்** |
| **4) புலவர்க்கு** | **–** | **வேல்** |

**ஒத்த ஓசையில் முடியும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.**

**(எ.கா.) பேர் – நேர்**

**விடை :**

1. பேர் – நீர்
2. பேர் – ஊர்
3. பால் – வேல்
4. வான் – தேன்
5. தோள் – வாள்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**குறுவினா**

**1. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை ?**

**பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் :**

அமுது, நிலவு, மணம்

**2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள் ?**

நாங்கள் தமிழை "உயிரோடு" ஒப்பிடுவோம்.

**V. சிறுவினா**

**1. இன்பத்தமிழ் – பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.**

தமிழ் எங்கள் உயர்வுக்குவான் ! – இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன் !

**2. விளைவுக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது ?**

★ விளைச்சலுக்கு நீர் அடிப்படையானது.
★ அது போலவே பயிர் எனும் தமிழ் சமூக வளர்ச்சிக்கு, நீர் எனும் தமிழ் அடிப்படையானது.

**சிந்தனை வினா:**

**1. வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப் படுகிறது ?**

★ வேலின் நுனிப்பகுதி கூர்மையாகவும், நடுப்பகுதி அகன்றும், கீழ்ப்பகுதி நீண்டு இருக்கும்.
★ அதனைப்போலவே தமிழும் நுட்பமான அறிவையும், பரந்த சிந்தனையையும், ஆழ்ந்தக் கருத்துகளையும் கொண்டது.
★ வேலின் கூர்மையான முனையைவிட நல்ல புகழ் மிகுந்த புலவரின் கருத்துக்கள் மிக கூர்மையானது. அத்தகைய கருத்துக்களுக்கு வலிமை தருவது தமிழ் ஆகும்.
★ ஆகையால் தமிழ் வேலுடன் ஒப்பிடப்படுகிறது.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. நிருமித்த என்னும் சொல்லின் பொருள்**

அ) சமூகம் ஆ) மக்கள் குழு
இ) உருவாக்கிய ஈ) விளைச்சல்

**விடை : இ) உருவாக்கிய**

**2. சமூகம் என்னும் சொல்லின் பொருள்**

அ) நாடு ஆ) மக்கள்குழு இ) தெரு ஈ) விளைவு

**விடை : ஆ) மக்கள்குழு**

**3. விளைவு என்னும் சொல்லின் பொருள்**

அ) இளமை ஆ) உருவாக்கிய இ) விளைச்சல் ஈ) சோர்வு

**விடை : இ) விளைச்சல்**

**4. அசதியின் மற்றொரு பெயர்**

அ) சோர்வு ஆ) சுறுசுறுப்பு இ) இன்பம் ஈ) இளமை

**விடை : அ) சோர்வு**

---

**பாரதிதாசன் குறிப்பு தருக**

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் : **பாரதிதாசன்**

இயற்பெயர் : **கனக சுப்புரத்தினம்**

பெயர் மாற்றக் காரணம் : **பாரதியாரின் கவிதைகளின் மீதுள்ள பற்று**

பிறந்த ஊர் : **புதுச்சேரி**

தந்தை : **கனகசபை**

தாயார் : **இலக்குமி அம்மையார்**

துணைவியார் : **பழனி அம்மையார்**

பிள்ளைகள் : **நான்கு**

சிறப்புப்பெயர் : **புரட்சிக்கவி, பாவேந்தர்.**

பதவி : **ஆசிரியர்**

இயற்றிய கவிதைகள் : **பெண்கல்வி, கைம் பெண் திருமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு**

இயற்றிய நூல்கள்: **பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு**

இயற்றிய பாடல்: **இன்பத் தமிழ்**

காலம்: **29.04.1891 முதல் 21.04.1964**

---

**கற்பவை கற்றபின்**

**1. இன்பத்தமிழ் என்ற பாடலை இனிய ஓசையுடன் பாடுக**

தமிழுக்கும் அமுதென்று பேர் ! – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர் !
தமிழுக்கு நிலவென்று பேர் ! – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர் !
தமிழுக்கு மணமென்று பேர் ! – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர் !
தமிழ் எங்கள் இளமைக்குப் பால் ! – இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல் !
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் ! – இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன் !

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் ! – இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள் !

**– பாரதிதாசன்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. தமிழை அமுது, நிலவு, மணம் என்று பெயரிட்டு அழைப்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**தமிழ்செல்வி –** அமுது என்ற தேவாமிர்தம் தேவர்களுக்கு மட்டுமே படைக்கப்பட்டது. அது அழியா வரத்தை தரக்கூடியது. அதைத் தேவர்கள் தம் உயிராகக் கருகின்றனர். அதைப்போலவே தமிழர்களின் வாழ்வுக்கும், உயர்வுக்கும் காரணமாக விளங்குவது தமிழே ஆகும். எனவே தமிழுக்கு அமுது என பெயரை சூட்டினால் பொருத்தமாகவே இருக்கும்.

**பார்த்திபன் –** இரவில் குளிர்ச்சியை ஊட்டும் நிலவை காணும் போது ஏற்படும் இன்பத்திற்கு ஈடு இணையில்லை. அது போல தமிழை பார்க்கும் போது ஏற்படும் இன்பத்திற்கு ஈடு இணையில்லை.

**செழியன் –** மலரை முகரும் முன்பே அதிலிருந்து வீசும் மணம் நம் நாசி வழியே சென்று நம் தேகத்தை புல்லரிக்க வைக்கிறது. அது போலவே தமிழின் ஒலி நம் செவி வழியே சென்று நம் தேகத்தை புல்லரிக்க வைக்கின்றது.

---

**3. தமிழுக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயர்களைப் பட்டியலிடுக.**

உயிர்த்தமிழ், இனிமைத்தமிழ், செந்தமிழ், தேன்தமிழ், இன்பத்தமிழ், பைந்தமிழ், வளர்தமிழ், முத்தமிழ்

---

**4. தமிழ்க் கவிதைகள், பாடல்களைப் படித்து மகிழ்க.**

(எ.கா) *தமிழே உயிரே வணக்கம்*
*தாய்பிள்ளை உறவம்மா, உனக்கும் எனக்கும்*
*அமிழ்தே நீ இல்லை என்றால்*
*அத்தனையும் வாழ்வில் கசக்கும் புளிக்கும்*
*தமிழே உன்னை நினைக்கும்*
*தமிழன் என் நெஞ்சம் இனிக்கும் இனிக்கும்.*

**– காசி ஆனந்தன்**

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கவிதைப்பேழை

## இயல் ஒன்று 1.2. தமிழ்க்கும்மி

### மனவரைபடம்




### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தாய் மொழியில் படித்தால் ...................... அடையலாம்.**

அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை

**விடை : ஆ) மேன்மை**

**2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ................. சுருங்கிவிட்டது.**

அ) மேதினி ஆ) நிலா

இ) வானம் ஈ) காற்று

**விடை: அ) மேதினி**

**3. செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............**

அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ்

இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ்

**விடை : ஈ) செம்மை+தமிழ்**

**4. "பொய்யகற்றும்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .....**

அ) பொய் + அகற்றும் ஆ) பொய் + கற்றும்

இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்

**விடை : அ) பொய் + அகற்றும்**

**5. பாட்டு + இருக்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................**

அ) பாட்டிருக்கும் ஆ) பாட்டுருக்கும்

இ) பாடிருக்கும் ஈ) பாடியிருக்கும்

**விடை: அ) பாட்டிருக்கும்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**6. எட்டு + திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.**

அ) எட்டுத்திசை ஆ) எட்டிதிசை
இ) எட்டுதிசை ஈ) எட்டிஇசை

**விடை : அ) எட்டுத்திசை**

**நயம் உணர்ந்து எழுதுக.**

**1. பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களை எடுத்து எழுதுக.**

**விடை :**

1. கொட்டுங்குடி – கோதையரே
2. எட்டு – எட்டிடவே
3. ஊழி – ஊற்றெனும்
4. ஆழி – அழியாமலே

**2. பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களை எடுத்து எழுதுக.**

**விடை :**

1. கொட்டுங்குடி – எட்டு
2. எட்டுத்திசை – எட்டிடவே
3. ஊழி – ஆழி
4. பொய் – மெய்

**3. பாடல் அடிகளில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.**

**விடை :**

1. கண்டதுவாம் – கொண்டதுவாம்
2. பாட்டிருக்கும் – காட்டிருக்கும்

**குறுவினா**

**1. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை ?**

**தமிழ் மொழியின் செயல்கள்:**

1. பொய்யை அகற்றும்.
2. மனத்தின் அறியாமையை நீக்கும்.
3. அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் நிறைந்திருக்கும்.
4. உயிர் போன்ற உண்மையை ஊட்டும்.
5. உயர்ந்த அறத்தைத் தரும்.
6. உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளை காட்டும்.

**2. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார் ?**

செந்தமிழின் புகழ் எட்டுத்திசைகளிலும் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

Padasalai

**சிறுவினா**

**1. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன ?**

**<u>தமிழ் மொழி காலவெள்ளத்தை எதிர்த்து நிற்க காரணம் :</u>**

★ பல நூறு ஆண்டுகளைக் கண்டது.
★ அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்டது.

**2. தமிழ்க் கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்து கொண்டவற்றை உம் சொந்த நடையில் தருக.**

**<u>தமிழ்க் கும்மி பாடலின் வழி நாங்கள் அறிந்து கொண்டவை:</u>**

★ செந்தமிழின் புகழ் எட்டுத் திசைகளிலும் பரவவேண்டும்.
★ பல நூறு ஆண்டுகளைக் கண்டது.
★ அறிவுஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்டது.
★ கடல் சீற்றங்கள், கால மாற்றங்களால் அழியாமல் நிலைத்திருக்கும்.
★ பொய்யை அகற்றும்.
★ மனத்தின் அறியாமையை நீக்கும்.
★ அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் நிறைந்திருக்கும்.
★ உயிர் போன்ற உண்மையை ஊட்டும்.
★ உயர்ந்த அறத்தைத் தரும்.
★ உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளை காட்டும்.

**சிந்தனை வினா**

**1. தமிழ்மொழி அறியாமையை எவ்வாறு அகற்றும் ?**

தமிழ்மொழி அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்டது. அவை பொய்யை அகற்றி, உண்மையை ஊட்டி அறியாமையை அகற்றும்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஆழிப்பெருக்கு என்னும் சொல்லின் பொருள்**

அ) கடல்கோள் ஆ) உலகம் இ) மேதினி ஈ) ஊழி

**விடை : அ) கடல்கோள்**

**2. நீண்ட தொரு காலப்பகுதி என்னும் சொல்லின் பொருள்**

அ) மேதினி ஆ) உலகம் இ) ஊழி ஈ) கடல்கோள்

**விடை : இ) ஊழி**

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மேதினியின் மற்றொருபெயர் ........... **விடை : உலகம்**

2. உள்ளப்பூட்டு என்னும் சொல்லின் பெயர்.................

**விடை : உள்ளத்தின் அறியாமை**

3. கனிச்சாறு என்னும் நூலில் இடம் பெற்றுள்ள பாடல்..................

**விடை : தமிழ்க்கும்மி**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**குறுவினா**

**1. கும்மி என்றால் என்ன ?**

பெண்கள் பலர் வட்டமாகக் கூடி நின்று இசைக்கு ஏற்றவாறு கைகளைத் தட்டியும், உடலை அசைத்தும் ஆடுவதே கும்மி எனப்படும்.

**பெருஞ்சித்திரனார் குறிப்பு தருக :**

**ஆசிரியர் குறிப்பு :**

பெயர் : **பெருஞ்சித்திரனார்**

சிறப்புப்பெயர் : **பாவலரேறு**

இயற்பெயர் : **மாணிக்கம்**

தந்தை : **துரைசாமி**

தாய் : **குஞ்சம்மாள் அம்மையார்**

பிறந்த ஊர் : **சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம்**

மனைவி : **தாமரை அம்மையார்**

இயற்றிய நூல்கள் : **கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம்**

நடத்திய இதழ்கள் : **தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்**

இயற்றிய பாடல் : **தமிழ்க்கும்மி**

காலம் : **10.3.1933 – 11.6.1995**

## கற்பவை கற்றபின்

**1. தமிழ்க்கும்மி பாடலை இசையோடு பாடி மகிழ்க.**

*கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி, இளங்*
*கோதையரே கும்மி கொட்டுங்கடி – நிலம்*
*எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்*
*எட்டிடவே கும்மி கொட்டுங்கடி !*

*ஊழி பலநூறு கண்டதுவாம், அறிவு*
*ஊற்றெனும் நூல்பல கொண்டதுவாம் – பெரும்*
*ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்*
*அழியாமலே நிலை நின்றதுவாம் !*

*பொய் அகற்றும் உள்ளப் பூட்டறுக்கும் – அன்பு*
*பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும்– உயிர்*
*மெய்புகட்டும், அறமேன்மை கிட்டும் இந்த*
*மேதினி வாழ்வழி காட்டிருக்கும் !*

**– பெருஞ்சித்திரனார்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. பின்வரும் கவிதை அடிகளைப் படித்து மகிழ்க.**

*வான்தோன்றி வளி தோன்றி நெருப்புத் தோன்றி*
*மண் தோன்றி மழை தோன்றி மலைகள் தோன்றி*
*ஊன் தோன்றி உயிர் தோன்றி உணர்வு தோன்றி*
*ஒளி தோன்றி ஒலி தோன்றி வாழ்ந்த அந்நாள்*
*தேன் தோன்றியது போல மக்கள் நாவில்*
*செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய் ! வாழி !*

**– வாணிதாசன்**


---

**உரைநடை உலகம்**

**இயல் ஒன்று**

## 1.3. வளர்தமிழ்

**மனவரைபடம்**




**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ‘தொன்மை’ என்னும் சொல்லின் பொருள் ................**

அ) புதுமை ஆ) பழமை
இ) பெருமை ஈ) சீர்மை **விடை : ஆ) பழமை**

**2. ‘இடப்புறம்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............**

அ) இடன்+புறம் ஆ) இடை+புறம்
இ) இடம்+புறம் ஈ) இடப்+புறம்

**விடை : இ) இடம்+புறம்**

**3. ‘சீரிளமை’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....... .......**

அ) சீர்+இளமை ஆ) சீர்மை+இளமை
இ) சீரி+இளமை ஈ) சீற்+இளமை

**விடை : ஆ) சீர்மை+இளமை**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**4. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........**

அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம்
இ) சிலம்புதிகாரம் ஈ) சில பதிகாரம்

**விடை : ஆ) சிலப்பதிகாரம்**

**5. கணினி + தமிழ் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .........**

அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ்
இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ்

**விடை : ஆ) கணினித்தமிழ்**

**6. “தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று பாடியவர் .............**

அ) கண்ணதாசன் ஆ) பாரதியார்
இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன் **விடை : ஆ) பாரதியார்**

**7. ‘ மா ’ என்னும் சொல்லின் பொருள் ............**

அ) மாடம் ஆ) வானம்
இ) விலங்கு ஈ) அம்மா **விடை : இ) விலங்கு**

---

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

**1.** நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ........

**விடை : மொழி**

**2.** தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் ............ **விடை : தொல்காப்பியம்**

**3.** மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது ............ அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

**விடை : எண்களின்**

---

**சொற்களைத் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. தனிச்சிறப்பு .....................................................

**விடை :** தமிழ் இலக்கியங்கள் **<u>தனிச்சிறப்பு</u>** மிக்கவை.

2. நாள்தோறும் .....................................................

**விடை :** திருக்குறளை **<u>நாள்தோறும்</u>** படிக்க வேண்டும்.

---

**குறுவினா :**

**1. தமிழ் மூத்தமொழி எனப்படுவது எதனால் ?**

★ தொல்காப்பியத்திற்கு முன்னதாகவே தமிழில் இலக்கிய நூல்கள் இருந்துள்ளன.

★ இதனைக் கொண்டு தமிழ் மூத்த மொழி என்பதை உணரலாம்.

---

**2. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக ?**

★ சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**சிறுவினா:**

**1. அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது ?**

★ உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை. அதனைத் தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை என்று பெயர் இட்டனர் நம் முன்னோர்.

★ **அஃறிணை (அல் + திணை = உயர்வு அல்லாத திணை)**

★ பாகற்காய் கசப்புச் சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல் இனிப்பு அல்லாத காய் என வழங்கினர்.

★ **பாகற்காய் ( பாகு + அல் + காய்)**

---

**2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.**

**தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் :**

★ தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை.

★ அவை ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.

---

**3. தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.**

**தமிழ் மொழியின் சிறப்பு:**

1. தமிழ்மொழி சிறப்புமிக்க செம்மொழியாகும்.
2. தமிழ்மொழி ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.
3. தமிழ்மொழி பேசவும், எழுதவும், படிக்கவும் உகந்த மொழியாகும்.
4. தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்பு பெயரும் உண்டு.
5. தமிழ் வரிவடிவ எழுத்துக்கள் அறிவியல் தொழில் நுட்ப நோக்கில் பயன்படுத்தத்தக்கவையாக உள்ளன.

---

**சிந்தனை வினா :**

**1. தமிழ் மொழி படிக்கவும், எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது ?**

★ உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்துகொண்டால் உயிர்மெய் எழுத்துக்களை எளிதாக ஒலிக்கலாம். எழுத்துக்களைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் மொழி படிக்க எளியது. (எ.கா) **அ + மு + து = அமுது**

★ தமிழ் எழுத்துக்கள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளதால் தமிழ்மொழி எழுத எளியது.

★ **(எ.கா)வலஞ்சுழி எழுத்துக்கள் – அ, எ, ஔ, ண, ஞ**
**இடஞ்சுழி எழுத்துக்கள் – ட, ய, ழ**

---

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.**

**<u>தமிழ்மொழி வளர்மொழி என உணர காரணம் :</u>**

1. தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன.
2. தமிழ் தற்போது அறிவியல் தமிழ், கணினித்தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது.
3. இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச் சொற்கள் உருவாகி வருகின்றன.
4. தமிழ் வரிவடிவ எழுத்துக்கள் அறிவியல் தொழில் நுட்ப நோக்கில் பயன்படுத்தத்தக்கவையாக உள்ளன.
5. தமிழ்மொழி கணினி, இணையம் போன்றவற்றில் பயன்படத்தக்க வகையில் திகழ்கிறது.

---

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடியவர்.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) சேக்கிழார்

**விடை : அ) பாரதியார்**

**2. சீர்மை என்பதன் பொருள்**

அ) ஒழுங்குமுறை ஆ) இனிமை
இ) உள்ளம் ஈ) மேன்மை

**விடை : அ) ஒழுங்குமுறை**

**3. உரைநடை வடிவங்களுள் ஒன்று**

அ) துளிப்பா ஆ) கட்டுரை இ) கவிதை ஈ) செய்யுள்

**விடை : ஆ) கட்டுரை**

---

**சிறுவினா.**

**1 முதல் 10 வரையுள்ள அரபு எண்களை தமிழ் எண்களாக மாற்றுக.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | க0 |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

**1. மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ் என்பது பற்றிக் கலந்துரையாடுக.**

**செல்வி –** தமிழ் தற்போது அறிவியல் தமிழ், கணினித்தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது.

**மலர்விழி –** இன்றைய அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.

**பனிமலர் –** தமிழ் வரிவடிவ எழுத்துக்கள் அறிவியல் தொழில் நுட்ப நோக்கில் பயன்படுத்தத்தக்கவையாக உள்ளன.

**வித்யா –** தொல்காப்பியம், நன்னூல் கணினி மொழிக்கும் ஏற்ற நுட்பமான வடிவத்தை பெற்றுள்ளன.

---

**2. தமிழ் பேசத்தெரியாத குடும்பத்தினர் உங்கள் பக்கத்து வீட்டில் உள்ளனர். அவர்களுக்கு நீங்கள் கற்றுத் தர விரும்பும் பத்துத் தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

**<u>நான் கற்றுத் தர விரும்பும் பத்துத் தமிழ் சொற்கள்:</u>**

1. வணக்கம் 2. வாங்க, வாங்க 3. உள்ளே வாருங்கள்
4. அமருங்கள் 5. நீர் அருந்துங்கள் 6. வீட்டில் அனைவரும் நலமா ?
7. நீங்கள் நலமா ? 8. நலம் 9. நன்றி 10. மீண்டும் வருக

---

**3. வாழ்த்துக்களைத் தமிழில் கூறுவோம்.**

**<u>இனிய பிறந்தநாள் வாழ்த்து</u>**

நீண்ட நீண்ட காலம் – நீ, நீடு வாழ வேண்டும் !
வானம் தீண்டும் தூரம் – நீ, வளர்ந்து வாழ வேண்டும் !
அன்பு வேண்டும் ! அறிவு வேண்டும் ! பண்பு வேண்டும் ! பரிவு வேண்டும் !
எட்டுத்திக்கும் புகழ வேண்டும், எடுத்துக்காட்டு ஆக வேண்டும்!
உலகம் பார்க்க உனது பெயரை, நிலவுத் தாளில் எழுதவேண்டும்
சர்க்கரைத் தமிழ் அள்ளி, தாலாட்டு நாள் சொல்லி வாழ்த்துகிறோம்!
பிறந்தநாள் வாழ்த்துகள் ! பிறந்தநாள் வாழ்த்துகள் !
இனிய பிறந்தநாள் வாழ்த்துகள் !

*– அறிவுமதி*

**<u>இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்</u>**

*தித்திக்கும் தமிழ் போல*
*பொங்கட்டும் பொங்கலது*

*புதுப்பானையில் இட்ட பொங்கல் போல*
*திகழட்டும் தேசமது*

*திகட்டாத கரும்பு போல*
*இனிக்கட்டும் மனிதனின் மனது*

*நெய்யில் வறுத்த முந்திரி போல*
*வாசம் பெருகட்டும் பூமியெங்கும்*

*அனைவருக்கும் இனிய பொங்கல்*
*நல்வாழ்த்துக்கள்*

**– வே.புனித வேளாங்கண்ணி**

www.Padasalai.Net www.TrbTnpsc.com




## விரிவானம்

இயல் ஒன்று

## 1.4. கனவு பலித்தது கடிதம்

### மனவரைபடம்




### மதிப்பீடு

**அத்தையின் கடிதக் கருத்துக்களைச் சுருக்கி எழுதுக.**

1. தமிழில் படித்தால் சாதிக்க முடியாது என்பது தவறான எண்ணம்.
2. சாதனைக்கு மொழி ஒரு தடை இல்லை.
3. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் கலந்தது இவ்வுலகம் என்ற அறிவியல் உண்மையை தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார்.
4. கடல் நீர் ஆவியாகி மேகமாகி பின்னர் குளிர்ந்து மழையாகப் பொழியும் என்ற அறிவியல் செய்தி பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
5. திரவப் பொருள்களை எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவைச் சுருக்க முடியாது என்ற அறிவியல் கருத்து ஔவையார் பாடலில் கூறப்பட்டுள்ளது.
6. வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ளது.
7. சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை, நரம்பினால் தைத்த செய்தி நற்றிணையில் காணப்படுகிறது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



8. தொலைவில் உள்ளது அருகில் தோன்றும் என்ற அறிவியல் அறிஞர் கலீலியோ கருத்து திருவள்ளுவமாலையில் கபிலர் எழுதிய பாடலில் இடம் பெற்றுள்ளது.

9. சாதனையாளர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு நமது ஊர் நூலகம் உதவியாக இருக்கும்.

10. நூல் வாசிப்பு நம் சிந்தனைக்கு வளம் சேர்க்கும். அறிவியல் மனப்பான்மை பெருகும்.

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. திருவள்ளுவமாலை என்னும் நூலினை எழுதியவர் ...............

**விடை : கபிலர்**

2. தமிழில் பயின்ற முன்னாள் குடியரசுத் தலைவர் ....................

**விடை : மேதகு அப்துல்கலாம்**

3. தமிழில் பயின்ற இஸ்ரோ அறிவியல் அறிஞர் ...................

**விடை : மயில்சாமி அண்ணாதுரை**

4. தமிழில் பயின்ற இஸ்ரோவின் தலைவர் ................. **விடை : சிவன்**

## கற்பவை கற்றபின்

**1. இக்கடிதத்திற்கு நீங்கள் விரும்பும் வகையில் வேறொரு தலைப்பிடுக.**

<u>**நான் விரும்பும் தலைப்பு :**</u>

'ஜெயிக்க நினை ; ஜெயித்திடு'

**2. உங்கள் எதிர்காலக் கனவு குறித்து ஒரு கடிதம் எழுதுக.**

இடம் : தேனி
நாள் :

அன்புள்ள சகோதரிக்கு,

நான் நலம், நீங்கள் நலமா ?

நான் நூலகத்தில் தமிழ்மொழி படித்த சாதனையாளர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை அறிந்து கொண்டேன். அதிலிருந்து நானும் தமிழ்வழியில் அறிவியல் பயின்று வருங்காலத்தில் மருத்துவராக வேண்டும் என்பது எனது குறிக்கோள் ஆகும்.

தங்கள் அன்புக்குரிய
**அறிவழகி**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**3. இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள் ?**

**இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்கள் :**

1. அத்தை இன்சுவையின் ஊக்கக் கடிதங்கள் மூலம் ஐயங்களை தீர்த்துக் கொண்டாள்.
2. ஆறாம் வகுப்பிலேயே எதிர்கால இலக்கினை உருவாக்கிக் கொண்டாள்.
3. அறிவியல் சிந்தனைகளோடு விளங்கியவர்கள், தமிழர்கள் என அறிந்து கொண்டாள்.
4. தமிழ் இலக்கியங்களில் உள்ள அறிவியல் சிந்தனைகளை அத்தையுடன் பகிர்ந்து கொண்டாள்.
5. சாதனையாளர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை நூலகத்தில் அறிந்து கொண்டாள்.
6. நூல் வாசிப்பு மூலம் சிந்தனைக்கு வளம் சேர்த்து, அறிவியல் மனப்பான்மையை பெற்றாள்.
7. தமிழாலும் சாதிக்க முடியும் என்று தெரிந்து கொண்டாள்.
8. தொடர்ந்து முயற்சி செய்தாள்.

---

**4. கனவு பலித்தது என்ற தலைப்பு இக்கடிதத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதனை விளக்குக.**

1. இன்சுவை ஆறாம் வகுப்பு பயிலும் போதே வருங்காலத்தில் அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும் என்ற கனவை தன் அத்தைக்கு கடிதம் எழுதினாள்.
2. அத்தையின் வழிகாட்டுததலால் அரசுப் பள்ளியில் தமிழ்வழியில் அறிவியல் அறிஞர் ஆகலாம் என்ற கனவு நிறை வேறியது.
3. அத்தையின் கடிதப்படி அறிவியல் சிந்தையோடு விளங்கியவர்கள் தமிழர்கள் என அறிந்து கொண்டாள்.
4. நூல்கள் பல படித்து வந்ததால் இன்சுவை எண்ணம் நிறைவேறியது.
5. இன்சுவை தொடர்ந்து முயற்சி செய்து வந்ததால் சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு நிறுவனத்தில்பணியில் சேர முடிந்தது.


---

கற்கண்டு

## இயல் ஒன்று

## 1.5. தமிழ் எழுத்துகளின் வகை தொகை

மனவரைபடம்




### மதிப்பீடு

**கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச்சொற்களை எழுதுக.**

1. உயிரெழுத்தில் தொடங்கும்இரண்டு மாத்திரை அளவுள்ள சொல் ...................
**விடை : அது**

2. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச் சொல் .........
**விடை : பூ**

3. ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் .......
**விடை : எஃகு**

**குறு வினா :**

**1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை,

1. எழுத்து இலக்கணம்
2. சொல் இலக்கணம்
3. பொருள் இலக்கணம்
4. யாப்பு இலக்கணம்
5. அணி இலக்கணம்

---

**2. மெய்யெழுத்துக்களை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.**

மெய்யெழுத்துக்களின் மூவகை இனங்கள் :

1. மெல்லினம் :
   எ.கா : ங், ஞ், ண், ந், ம், ன்
2. இடையினம் :
   எ.கா : ய், ர், ல், வ், ழ், ள்
3. வல்லினம் :
   எ.கா : க், ச், ட், த், ப், ற்

---

**3. தமிழ் எழுத்துக்களுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.**

உயிர் எழுத்துக்களில்

★ குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு – 1 மாத்திரை
★ நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு – 2 மாத்திரை
★ மெய் எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு – அரை மாத்திரை
★ ஆய்த எழுத்தை ஒலிக்கும் கால அளவு – அரை மாத்திரை
எ.கா : ஃ

---

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. தமிழ் எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை ..........
   **விடை : 247**
2. உயிர் எழுத்துக்களின் எண்ணிக்கை .................
   **விடை : 12**
3. மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை............
   **விடை : 18**

---

**குறுவினா**

**1. எழுத்து என்றால் என்ன ?**

ஒலி வடிவாக எழுப்பப்படுவதும், வரி வடிவாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.

---

**2. உயிர் எழுத்துகள் யாவை ?**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டு அவை : அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

**3. ஒரு மாத்திரை என்பது யாது ?**

ஒரு மாத்திரை என்பது ஒரு முறை கண் இமைக்கவோ, ஒரு முறை கை நொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.

**4. குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு யாது ?**

குறில் எழுத்துகள் – அ, இ, உ, எ, ஒ

இவற்றை ஒலிக்கும் கால அளவு 1 மாத்திரை.

**5. நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு யாது ?**

நெடில் எழுத்துகள் – ஆ, ஈ, ஊ, ஐ, ஏ, ஓ, ஔ

இவற்றை ஒலிக்கும் கால அளவு 2 மாத்திரை.

## கற்பவை கற்றபின்

**உங்கள் பெயர் மற்றும் உங்கள் நண்பர்களது பெயர்களுக்கான மாத்திரை அளவைக் கண்டுபிடி.**

**(எ.கா) கபிலர் – 1 + 1 + 1 + ½ = 3 ½**

**குறில்** – 1 மாத்திரை **நெடில்** – 2 மாத்திரை **மெய்** – ½மாத்திரை

1. **மலர்** = 1 + 1 + ½ = 2 ½ மாத்திரை
2. **காவேரி** = 2 + 2 + 1 = 5 மாத்திரை
3. **கல்பனா** = 1 + ½ + 1 + 2 = 4 ½ மாத்திரை
4. **குமரன்** = 2 + 1 + 1 + ½ = 4 ½ மாத்திரை

## இயல் ஒன்று 1.6 மொழியை ஆள்வோம்

**கேட்டும் பார்த்தும் உணர்க.**

**1. இனிய தமிழ்ப்பாடல்களைக் கேட்டு மகிழ்க.**

காக்கைச் சிறகினிலே நந்தலாலா
நின்றன் கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா
நல்லதோர் வீணை செய்து அதை
நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ

**2. தமிழறிஞர்களின் வானொலி, தொலைக்காட்சி உரைகளைக் கேட்டு மகிழ்க.**

**அறிஞர் அண்ணாவின் வானொலி உரை :**

இதோ நான் பேசுகிறேன். நீங்கள் கேட்கிறீர்கள். இடையே பலப்பல மைல்கள். இந்த ஒலி கேட்பது அறிவின் துணை கொண்டு, விஞ்ஞானி ஆக்கித் தந்த சாதனம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்வதிசயச் சாதனங்கள் இல்லாதிருந்த நாட்கள் நமது முன்னோர்கள் காலம். இவ்வளவு வசதிகள் நமக்கிருக்கிறது. ஏன், மனவளம் இவ்வளவு குறைவாக இருக்கிறது? வீடுகளிலே மனவளத்தை அதிகரிக்கவோ, பாதுகாக்கவோ, நாம் முயற்சி செய்வதில்லை, வழிவகை தேடிக்கொள்வதில்லை.

வீடுகளில் மேஜை, நாற்காலி, சோபாக்கள் இருக்கும். பீரோக்கள் இருக்கும். அவைகளில் வெள்ளித் தாம்பாளமும், விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச் செம்பும் இருக்கும். பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும். உடைகள் சிறு கடை அளவுக்கு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்தியசாலை அளவுக்கு இருக்கும். அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயுங்கூட புத்தகசாலை இராது.

வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயம் வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும் போகபோக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி, புத்தகசாலைக்கு அந்த இடம் தரப்படவேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தகசாலைக்குத் தரப்படவேண்டும்.

---

**2. கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக.**

**<u>தமிழ் இனிது, தமிழ் எளிது, தமிழ் புதிது</u>**

**<u>தமிழ் இனிது :</u>** தமிழ் இலக்கியங்கள் பலவும் இனிமையானவை. ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை. பல மொழிகள் கற்ற கவிஞர் பாரதியார்.

*யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்*
*இனிதாவது எங்கும் காணோம்*

என்று தமிழ் மொழியின் இனிமையை வியந்து பாடினார்.

**<u>தமிழ் எளிது :</u>** உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் ஒலிகள். உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டாலே உயிர்மெய் எழுத்துகளை எளிதாக ஒலிக்கலாம். எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழ்ந்துவிடும்.

எ.கா. அ + மு + து = அமுது.

தமிழ்மொழியை எழுதும் முறையும் மிக எளிதுதான். இதற்கேற்ப, தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.

எ.கா. *வலஞ்சுழி எழுத்துகள் – அ, எ, ஔ, ண, ஞ*
*இடஞ்சுழி எழுத்துகள் – ட, ய, ழ*

<u>**தமிழ் புதிது :**</u> இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.

இணையம், முகநூல், புலனம், குரல்தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். சமூக ஊடகங்களான செய்தித்தாள், தொலைக்காட்சி ஆகியவற்றிலும் பயன்படத்தக்க மொழியாகவும் விளங்குகிறது தமிழ்மொழி.

**சொல்லக் கேட்டு எழுதுக.**

*இன்பத்தமிழ் தொல்காப்பியம் சுப்புரத்தினம்*
*பன்னிரண்டு பாவேந்தர் அஃறிணை*
*செந்தமிழ் ஆராய்ச்சியாளர் உயிரினங்கள்*
*கருவூலங்கள்*

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, **சுத்தம் சோறு போடும்** என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல் ஆரோக்கியமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

1. பழமொழியின் சிறப்பு .................. **சொல்வது.**

அ) விரிவாகச் ஆ) சுருங்கச்
இ) பழைமையைச் ஈ) பல மொழிகளில்

**விடை : ஆ) சுருங்கச்**

2. நோயற்ற வாழ்வைத் தருவது ..................... **விடை : சுத்தம்**

3. உடல் ஆரோக்கியமே ..................... அடிப்படை.

**விடை : உழைப்புக்கு**

4. உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை ?

**விடை : உணவு, உடை, உறைவிடம்**

5. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

**விடை : பழமொழியின் சிறப்பு**

**பிறமொழிக் கலப்பின்றிப் பேசுக.**

**1. எங்க ஸ்கூல்லே சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.**

**விடை :** எங்க <u>**பள்ளியிலே**</u> சுற்றுலா அழைத்துப் போகிறார்கள்.

**2. பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.**

**விடை :** பெற்றோரிடம் <u>**அனுமதிக்கடிதம்**</u> வாங்கி வரச் சொன்னார்கள்.

**ஆய்ந்தறிக.**
**பெயரில் தலைப்பெழுத்தைப் பலவகையாக எழுதுகின்றோம். S. இனியன், எஸ்.இனியன், ச.இனியன் – இவற்றுள் சரியானது எது ? ஏன் ?**

**விடை :**

**ச.இனியன்** என்பது சரியானது.

**‘S’** மற்றும் **‘எஸ்’** என்பது **ஆங்கில** உச்சரிப்பாகும்.

---

**கடிதம் எழுதுக.**
**விடுப்பு விண்ணப்பம்.**

அனுப்புநர்

ம. விமலா,
ஆறாம் வகுப்பு "அ" பிரிவு,
நிர்மலா பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
மதுரை – 625009

பெறுநர்

வகுப்பாசிரியர்
நிர்மலா பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
மதுரை – 625009

ஐயா,

வணக்கம். நான் என் பெற்றோருடன் இணைந்து என் அக்காவின் புது மனை புகு விழாவிற்கு செல்லும் காரணத்தால் எனக்கு இரண்டு நாள்கள் மட்டும் விடுப்பு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.
தங்கள் உண்மையுள்ள மாணவி
ம. விமலா

இடம் : மதுரை
நாள் :

க. மணிவண்ணன்
பெற்றோர் கையொப்பம்

---

Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## இயல் ஒன்று 1.7 மொழியோடு விளையாடு

**திரட்டுக.**

**மை என்னும் எழுத்தில் முடியும் சொற்களின் பட்டியல் தயாரிக்க.**

**<u>நான் தயாரித்த பட்டியல்:</u>**

| | |
|---|---|
| 1. உண்மை | 2. இனிமை |
| 3. அருமை | 4. செம்மை |
| 5. வளமை | 6. முதன்மை |
| 7. வலிமை | 8. எளிமை |
| 9. மென்மை | 10. மேன்மை |

---

### சொல்வளம் பெறுவோம்

**1. கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.**

**(எ.கா) கரும்பு – கரு, கம்பு**

**விடை:**

| | | |
|---|---|---|
| 1.கவிதை | – | கவி, கதை, விதை, தை |
| 2.பதிற்றுப்பத்து | – | பதி, பத்து, பற்று, பதித்து |
| 3.பரிபாடல் | – | பாடல், பால், பல், பாரி |

---

**2. இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

**நூல், மொழி, கோல், மீன், நீதி, எழுது, கண், வெளி, தமிழ், மணி, மாலை, விண் (எ.கா) விண்மீன்**

விடை:

| | |
|---|---|
| 1. நீதிநூல் | 2. தமிழ் மணி |
| 3. எழுதுகோல் | 4. கண்மணி |
| 5. தமிழ்நூல் | 6. தமிழ்மொழி |
| 7. விண்வெளி | 8. தமிழ்மாலை |
| 9. விண்மீன் | |

---

**பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக.**

**அழகு, ஏற்றம், இன்பம், ஊக்கம், இனிமை, ஆற்றல், ஈடு, இசை, உணர்வு, ஏடுகள், உரிமை, என்றும், எளிதாய், உவகை, அன்பு**

| | | |
|---|---|---|
| **எ.கா : அ** | – | **<u>அன்பு</u> தருவது தமிழ்** |
| ஆ | – | **<u>ஆற்றல்</u>** தருவது தமிழ் |
| இ | – | **<u>இனிமை</u>** தருவது தமிழ் |
| ஈ | – | **<u>ஈடு</u>** இல்லாதது தமிழ் |
| உ | – | **<u>உணர்வு</u>** தருவது தமிழ் |
| ஊ | – | **<u>ஊக்கம்</u>** தருவது தமிழ் |
| எ | – | **<u>என்றும்</u>** வேண்டும் தமிழ் |
| ஏ | – | **<u>ஏற்றம்</u>** தருவது தமிழ் |

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கட்டங்களில் மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடிக்க.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ர | தி | தா | ச | ன் | க |
| ர | ம் | தா | ர | சு | ச | ம் |
| தி | ரு | வ | ள் | ளு | வ | ர் |
| யா | யா | தை | ஔ | வை | யா | ர் |
| ர் | ன் | ச | தா | ணி | வா | ன் |

1. பாரதிதாசன்
2. பாரதியார்
3. திருவள்ளுவர்
4. ஔவையார்
5. வாணிதாசன்

---

**நிற்க அதற்குத் தக.......**
**(என் பொறுப்புகள்)**

**1. நான் தாய் மொழியிலேயே பேசுவேன்;**
**2. தாய்மொழியிலேயே கல்வி கற்பேன்.**
**3. தமிழ்ப் பெயர்களையே சூட்டுவேன்.**

1. இளங்கோவன்
2. தமிழரசு
3. அறிவழகி
4. திருநாவுக்கரசு
5. நெடுஞ்செழியன்
6. தேன்மொழி
7. அமுதன்
8. கபிலன்
9. மதியரசு
10. கலையரசி

---

**கலைச்சொல் அறிக.**

1. வலஞ்சுழி – Clockwise
2. இணையம் – Internet
3. தேடுபொறி – Search engine
4. முகநூல் – Face book
5. புலனம் – Whats app
6. இடஞ்சுழி – Anti Clockwise
7. குரல்தேடல் – Voice Search
8. தொடுதிரை – Touch Screen
9. செயலி – App
10. மின்னஞ்சல் – E-mail

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


**இணையத்தில் காண்க.**

**உனக்குப் பிடித்த தமிழ்க் கவிஞர் பற்றிய செய்திகளை இணையத்தில் தேடி அறிக.**

**<u>இராமலிங்க அடிகளார்:</u>**

**<u>ஆசிரியர் குறிப்பு:</u>**

இயற்பெயர்: **இராமலிங்க அடிகளார்**

தந்தை: **இராமையா**

தாயார்: **சின்னம்மையார்**

பிறப்பிடம்: **சிதம்பரத்தை அடுத்துள்ள மருதூர்**

இயற்றிய கடவுள் வாழ்த்து: **திருவருட்பா**

காலம்: **05.10.1823 முதல் 30.01.1874 வரை**

## இயல் ஒன்று 1.8 கட்டுரை

**1. உனக்கு தெரிந்த தமிழ் கவிஞர் என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.**

*முன்னுரை, இளமைக்காலம், புரட்சிக்கவி, பகுத்தறிவு சிந்தனை, முடிவுரை*

**முன்னுரை:**

தமிழைப் பல விதங்களில் போற்றியவர் பாரதிதாசன். அதுபோலவே தமிழரின் நிலையை மாற்ற உறுதி கொண்டு தொண்டாற்றியவர்.

**இளமைக்காலம்:**

புதுச்சேரியில் கனகசபை, இலக்குமியம்மையார் என்போர்க்கு 29.4.1891 ல் பிறந்தார். அவர் இயற்பெயர் சுப்புரத்தினம். பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாக தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

***தமிழுக்கு அமுதென்றுபேர் – அந்தத்***
***தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் !***

என்று தன் தமிழ்பற்றை வெளிப்படுத்தினார்.

**புரட்சிக்கவி:**

பாரதிதாசன் தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான கருத்துகளை உள் வாங்கிப்பாடியுள்ளார். 29.7.1946 ஆம் நாளில் அறிஞர் அண்ணா தலைமையில் பாராட்டு விழா நடத்தப்பட்டு புரட்சிக்கவி என்னும் பட்டமும் ரூ 25,000/– பணமுடிப்பும் வழங்கப்பட்டது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**பகுத்தறிவு சிந்தனை :**

இளமைக்காலத்தில் ஆன்மீகப் பாடல்கள் பாடினார். கவிதைகள், பாரதியாருடன் தொடர்பு ஏற்பட்ட பின்னர் சமூக மாற்றத்திற்கான பாடல்களைப் பாடத் தொடங்கினார். அதன் பிறகு தந்தை பெரியாரின் கொள்கைகளால் கவரப்பட்டுப் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதைகளாக்கினார்.

**முடிவுரை :**

பாரதிதாசன் 26.04.1964 ஆம் நாளில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது நினைவைப் போற்றும் வண்ணம் தமிழ்நாடு அரசு பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைத்துச் சிறப்பித்துள்ளது.

---

## கடிதம்

**பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற நண்பனுக்கு பாராட்டு மடல்.**

இடம் : திண்டுக்கல்
நாள் :

இனிய நண்பா

வணக்கம். நலம். நலம்அறிய ஆவல்.

கடந்த வாரம் உன் பள்ளியில் நடந்த திருக்குறள் பேச்சுப் போட்டியில் நீ முதலிடம் பெற்று சுழற்கேடயத்தைப் பள்ளிக்குப் பெற்றுத் தந்து பெருமை சேர்த்துள்ளதை அறிந்து மிகவும் மகிழ்வுற்றேன்.

படிப்பில் நீ காட்டி வருகின்ற ஆர்வம்தான் நீ முதலிடம் வர உதவுகின்றன. நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

உன் அன்பிற்குரிய

நண்பன்
அகிலன்

உறைமேல் முகவரி
செல்வன். கரிகாலன்
21, பெரியகுளம் ரோடு
தேனி மாவட்டம்

---

Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# செலக்சன்
# தமிழ்
## ஆறாம் வகுப்பு ⑥
## இரண்டாம் பருவம்

பொருளடக்கம்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி * | 82 |
| 1. | கல்வி | 1.1 மூதுரை | 84 |
| | | 1.2 துன்பம் வெல்லும் கல்வி | 87 |
| | கண்ணெனத் தகும் | 1.3 கல்விக்கண் திறந்தவர் | 93 |
| | | 1.4 நூலகம் நோக்கி... | 97 |
| | | 1.5 இன எழுத்துக்கள் | 100 |
| | | 1.6 மொழியை ஆள்வோம் | 101 |
| | | 1.7 மொழியோடு விளையாடு | 106 |
| | | 1.8 கட்டுரை | 110 |
| | | கடிதம் | 111 |
| 2. | நாகரிகம், பண்பாடு பாடறிந்து ஒழுகுதல் | 2.1 ஆசாரக்கோவை | 113 |
| | | 2.2 கண்மணியே கண்ணுறங்கு | 116 |
| | | 2.3 தமிழர் பெருவிழா | 120 |
| | | 2.4 மனம் கவரும் மாமல்லபுரம் | 125 |
| | | 2.5 மயங்கொலிகள் | 129 |
| | | 2.6 மொழியை ஆள்வோம் | 132 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 135 |
| | | 2.8 திருக்குறள் * | 137 |
| | | 2.9 கட்டுரை | 142 |
| | | கடிதம் | 144 |
| 3 | தொழில் வணிகம் கூடித் தொழில் செய் | 3.1 நானிலம் படைத்தவன் | 145 |
| | | 3.2 கடலோடு விளையாடு * | 149 |
| | | 3.3 வளரும் வணிகம் | 154 |
| | | 3.4 உழைப்பே மூலதனம் | 158 |
| | | 3.5 சுட்டெழுத்துக்கள், வினா எழுத்துக்கள் | 161 |
| | | 3.6 மொழியை ஆள்வோம் | 164 |
| | | 3.7 மொழியோடு விளையாடு | 166 |
| | | 3.8 கட்டுரை | 169 |
| | | கடிதம் | 171 |


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 6. தமிழ்

## மனப்பாடப்பகுதி

### இரண்டாம் பருவம்

**மூதுரை**

*மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்*
*மன்னனின் கற்றோன் சிறப்புடையன் – மன்னற்குத்*
*தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்*
*சென்ற இடமெல்லாம் சிறப்பு*

***– ஔவையார்***

**திருக்குறள்**

*1. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து*

*2. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத்து அனையது உயர்வு.*

*3. சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க*
*சொல்லில் பயன்இலாச் சொல்.*

***– திருவள்ளுவர்***

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**கடலோடு விளையாடு**

*விடிவெள்ளி நம்விளக்கு – ஜலசா*
*விரிகடலே பள்ளிக்கூடம் – ஜலசா*
*அடிக்கும் அலை நம்தோழன் – ஜலசா*
*அருமைமேகம் நமதுகுடை – ஜலசா*
*வெண்மணலே பஞ்சுமெத்தை – ஜலசா*
*விண்ணின்இடி காணும்கூத்து – ஜலசா*

*பாயும்புயல் நம்ஊஞ்சல் – ஜலசா*
*பனிமூட்டம் உடல் போர்வை – ஜலசா*
*காயும்கதிர்ச் சுடர்கூரை – ஜலசா*
*கட்டுமரம் வாழும்வீடு – ஜலசா*
*மின்னல்வரி அரிச்சுவடி – ஜலசா*
*பிடிக்கும் மீன்கள் நம்பொருள்கள் – ஜலசா*
*முழுநிலவே கண்ணாடி – ஜலசா*
*மூச்சடக்கும்நீச்சல் யோகம் – ஜலசா*
*தொழும்தலைவன் பெருவானம் – ஜலசா*
*துணிவோடு தொழில்செய்வோம் – ஜலசா*

***–சு. சக்திவேல் தொகுத்த நாட்டுப்புற இயல் ஆய்வு.***

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## இயல் ஒன்று — 1. கண்ணெனத்தகும்

### கவிதைப்பேழை

## இயல் ஒன்று — 1.1. மூதுரை

**மனவரைபடம்**

மன்னன் → நாட்டில் மட்டும் சிறப்பு

கல்வி கற்றவர் → சென்ற இடமெல்லாம் சிறப்பு

---

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மாணவர்கள் நூல்களை........................கற்கவேண்டும்**

அ) மேலோட்டமாக ஆ) மாசுற

இ) மாசற ஈ) மயக்கமுற **விடை : இ) மாசற**

**2. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) இடம் + மெல்லாம் ஆ) இடம் + எல்லாம்

இ) இட + எல்லாம் ஈ) இட + மெல்லாம்

**விடை : ஆ) இடம் + எல்லாம்**

**3. மாசற எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) மாச + அற ஆ) மாசு + அற

இ) மாச + உற ஈ) மாசு + உற **விடை : ஆ) மாசு+ அற**

**4. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) குற்றமில்லாதவர் ஆ) குற்றம் இல்லாதவர்

இ) குற்றமல்லாதவர் ஈ) குற்றம் அல்லாதவர்

**விடை : அ) குற்றமில்லாதவர்**

**5. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) சிறப்புஉடையார் ஆ) சிறப்புடையார்

இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார்

**விடை : ஆ) சிறப்புடையார்**

---

**குறுவினா :**

**கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை ?**

**<u>கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன.</u>**

1. மன்னனையும், குறை இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால், மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவர்.
2. மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு.
3. கல்வி கற்றவருக்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிறுவினா :**

**கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள் ?**

**கல்வியின் சிறப்புகள் :**

1. செல்வம், ஆட்சி, அதிகாரம் ஆகியவற்றை விட கல்வியே சிறந்தது.
2. அது பிறருக்குத் தந்தாலும் குறையாமல் வளரும்
3. கல்வியைப் பிறரால் கைப்பற்றவோ, அழிக்கவோ முடியாது.
4. கல்வியைக் கற்றவன் எங்கும் எப்போதும் சிறப்பு பெறுவான்.
5. கற்றவரே கண்ணுடையவர்.

---

**சிந்தனை வினா :**

**கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுக.**

**கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகள்:**

1. கல்லாதவர் விலங்கிற்கும், மரத்திற்கும் ஒப்பானவர் எனக் கருதப்படுகிறது.
2. அவரை அவரது சமூகம்கூட மதிப்பதில்லை.
3. தனது செல்வத்தைப் பாதுகாக்க முடியாது.
4. வாகன ஓட்டுநர் உரிமம் பெற இயலாது.
5. குறைந்த ஊதியமே கிடைக்கும்.
6. தாழ்நிலைப் பணியே கிடைக்கும்.
7. படிக்கவும், எழுதவும் முடியாது
8. அடுத்தவரை நம்பியே வாழ முடியும்.

---

**கூடுதல் வினாக்கள்—விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. குறை இல்லாமல் எனும் சொல்லின் பொருள்**

அ) மாசற ஆ) தேசம் இ) நெறி ஈ) வற்றாமல்

**விடை : அ) மாசற**

**2. ஒப்பிட்டு ஆராய்ந்து என்னும் சொல்லின் பொருள்**

அ) மாற்றார் ஆ) சீர்தூக்கின் இ) தேசம் ஈ) மாசற

**விடை : ஆ) சீர்தூக்கின்**

**3. தேசம் எனும் சொல்லின் பொருள்**

அ) கண்டம் ஆ) நெறி இ) மாசற ஈ) நாடு **விடை : ஈ) நாடு**

**4. மூதுரை எனும் நூலின் ஆசிரியர்**

அ) திருவள்ளுவர் ஆ) பாரதிதாசன் இ) ஔவையார் ஈ) பாரதியார்

**விடை : இ) ஔவையார்**

---

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**சிறுவினா**

**1. ஔவையார் குறிப்பு தருக.**

**ஆசிரியர் குறிப்பு :**

**பெயர்** : ஔவையார் என்ற பெண்பாற் புலவர்

**கருத்து** : தவப்பெண்

**தந்தை** : பகவன்

**தாய்** : ஆதி

**பெயர் பொருள் :** அவ்வா

**இயற்றிய நூல்கள்** : ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை

**காலம்** : 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்

---

## கற்பவை கற்றபின்

**1. கல்வியே அழியாச் செல்வம் என்னும் தலைப்பில் பேசுக.**

**உரை செந்தில் :**

**முன்னுரை :** வணக்கத்திற்குரிய வகுப்பாசிரியர் அவர்களே! இனிய நண்பர்களே! வணக்கம், கல்வியே அழியாச் செல்வம் என்னும் தலைப்பில் என் உரையைத் தொடங்குறேன்.

**சிறப்பு :** கற்றவனுக்கு எந்த நாடும் ஊரும் தன்னுடைய ஊராகும், கல்வி கற்றவன் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவன் பிற சமூகத்தாலும் மதிக்கப்படுகின்றான்

**வள்ளுவர் வாக்கு :** கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக என்ற வள்ளுவர் குறள்படி ஒருவன் தான் எவ்வளவு கல்வி கற்றாலும் அதனைச் செயல் வடிவில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் கற்ற கல்வியின் பயன் அவனுக்குக் கிடைக்கும். இல்லாவிடில் அவன் கற்ற கல்வியின் பயன் ஒன்றும் இல்லாமல் போய்விடும்.

**பண்பு :** ஒருவன் தான் கற்ற கல்வியின் இன்பத்தை உணர்ந்தானாயின் அவன் மீண்டும் கற்பதையே விரும்புவான். இது கல்வியின் பண்பாக கருதப்படுகிறது.

**பயன்கள் :** கல்வி தொழில் தொடங்க வழிகாட்டுகிறது. கல்வி கற்றவனிடம் ஒழுக்கம், பண்பு, நேர்மை, நீதி இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து இருக்கும். கல்லாதவர் விலங்கிற்கும், மரத்திற்கும் ஒப்பானவர். கற்றவரே கண்ணுடையவர். கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்ணுடையவர்.

**முடிவுரை :** கல்வி ஒரு செல்வம். பொருள் மற்றொரு செல்வம். பொருட்செல்வம் அழியக்கூடியது. கல்விச் செல்வம் தீயாலும், புயலாலும், காலத்தாலும் அழியாது. கல்விச் செல்வத்தை கொடுப்பவனையும், கொள்பவனையும் உயர்த்தும்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. கல்வி பற்றிய பழமொழிகள் அல்லது பாடல் அடிகள் எவையேனும் இரண்டினைப் பெரியோர்களிடம் கேட்டு எழுதி வருக.**

**கல்வி பற்றிய பழமொழிகள் :**

1. "இளமையில் கல்", "பருவத்தே பயிர் செய்"
2. "கற்றது கைமண்ணளவு ; கல்லாதது உலகளவு"

**கல்வி பற்றிய பாடல் அடிகள் :**

1. காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு – என்று
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா


2. ஆட்சி அதிகாரம் வேண்டும் – நமக்கு
அரசாங்க வேலையும் வேண்டும்
அன்றாடம் காய்ச்சியேயினும் – நாம்
வென்றாள கல்வியே வேண்டும்.

## கவிதைப்பேழை

**இயல் ஒன்று**

## 1.2. துன்பம் வெல்லும் கல்வி

### மனவரைபடம்




### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மாணவர் பிறர்.........................நடக்கக்கூடாது**

அ) போற்றும்படி ஆ) தூற்றும்படி
இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி

**விடை : ஆ) தூற்றும்படி**

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. நாம் ........................ சொல்படி நடக்கவேண்டும்.**

அ) இளையோர் ஆ) ஊரார்

இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர் **விடை : இ) மூத்தோர்**

**3. கைப்பொருள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) கையில் + பொருள் ஆ) கைப் + பொருள்

இ) கை + பொருள் ஈ) கைப்பு + பொருள்

**விடை : இ) கை + பொருள்**

**4. மானம் + இல்லா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) மானம்இல்லா ஆ) மானமில்லா

இ) மானமல்லா ஈ) மானம்மில்லா

**விடை : ஆ) மானமில்லா**

---

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**1. மனமாற்றம்**

தோல்வியைக் கண்டு **மனமாற்றம்** அடையக்கூடாது

**2. ஏட்டுக்கல்வி**

கல்வி **ஏட்டுக்கல்வி,** தொழிற்கல்வி என இருவகைப்படும்

**3. நல்லவர்கள்**

**நல்லவர்கள்** குறைசொல்லும்படி வளரக்கூடாது

**4. சோம்பல்**

துன்பத்தை நீக்கும் கல்வியைக் கற்க **சோம்பலைப்** போக்கிட வேண்டும்

---

**குறுவினா:**

**1. நாம் யாருடன் சேரக்கூடாது ?**

நாம் தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக்கூடாது

---

**2. எதை நம்பி வாழக்கூடாது ?**

பிறர் உழைப்பினை நம்பி வாழக்கூடாது

---

**3. இந்தப் பாடலின் முதல் இருவரிகள் நினைவூட்டும் திருக்குறள் எது ?**

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

---

**4. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம் ?**

நாம் மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழ்ந்தால் பெருமை பெறலாம்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**சிறுவினா :**

**நாம் எவ்வாறு வாழவேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார் ?**

**நாம் எவ்வாறு வாழவேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுவது:**

★ நாம் நூல்களைக் கற்றதோடு கற்றதன் பயனை மறக்கக்கூடாது.

★ நம் நாட்டின் நெறி தவறி நல்லவர்கள் குறை சொல்லும்படி வளரக்கூடாது.

★ பெரியோர் கூறும் அறிவுரைகளை மீறக்கூடாது.

★ பிறரிடம் பழகும் முறையிலும் பேசும் முறையிலும் பண்புநெறி மாறக்கூடாது.

★ பிறர் உழைப்பில் வாழக்கூடாது

★ தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேராமல் கல்வியினைக் கற்க வேண்டும்.

★ சோம்பலைப் போக்கிட வேண்டும்.

★ பிறருடன் வம்புசெய்யும் வழக்கத்தை விட்டு விட்டு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

★ மேலான அறிஞர்கள்கூறிய அறிவுரைகளின்படி வாழ்ந்து வெற்றிகளையும், விருதுகளையும், பெருமைகளையும் பெறவேண்டும்.

★ பெற்ற தாயின் புகழும் தாய்நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழ வேண்டும்.

---

**சிந்தனை வினா :**

**நீங்கள் படித்து கிராமத்தில் என்னவாக விரும்புகிறீர்கள் ? ஏன் ?**

**நான் படித்து கிராமத்தில் மருத்துவராக பணிபுரிய விரும்புகிறேன். ஏனெனில்,**

1. நவீன மருத்துவம் என்பது கிராம மக்களுக்கு எட்டாக் கனியாக உள்ளது.
2. கிராமங்களில் நவீன மருத்துவமனைகள் கிடையாது.
3. அதனால் அவர்கள் சிகிச்சைக்காக நகரத்திற்கு வரவேண்டியுள்ளது.
4. இந்த நிலையை மாற்றி கிராம மக்களுக்குச் சேவை செய்யவே நான் கிராமத்தில் மருத்துவராக பணிபுரிய விரும்புகிறேன்.

---

## கூடுதல் வினாக்கள்–விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தூற்றும்படி எனும் சொல்லின் பொருள்**

அ) வாழ்த்தும்படி ஆ) இகழும்படி

இ) அழியாமல் ஈ) வியக்கும்படி

**விடை : ஆ) இகழும்படி**

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. மூத்தோர் எனும் சொல்லின் பொருள்**
அ) பெரியோர் ஆ) ஊரார்
இ) இளையோர் ஈ) வழிப்போக்கர் **விடை : அ) பெரியோர்**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. மேதைகள் என்னும் சொல்லின் பொருள்..............
**விடை : அறிஞர்கள்**
2. மாற்றார் என்னும் சொல்லின் வேறு பெயர்.................
**விடை : மற்றவர்**
3. நெறியின் மற்றொரு பெயர்................. **விடை : வழி**
4. வற்றாமல் என்னும் சொல்லின் பொருள்.................
**விடை : அழியாமல்**
5. குறை என்ற சொல்லின் எதிர்ச்சொல்................. ஆகும்.
**விடை : நிறை**
6. சோம்பல் என்ற சொல்லின் எதிர்ச்சொல்................. ஆகும்.
**விடை : சுறுசுறுப்பு**
7. மக்கள் கவிஞர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர்............
**விடை : பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் குறிப்புதருக:**

**ஆசிரியர் குறிப்பு :**

**பெயர் :** பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
**ஊர் :** தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகில் உள்ள செங்கப்படுத்தான் காடு
**தந்தை :** அருணாச்சலனார்
**தாய் :** விசாலாட்சி
**சிறப்புப் பெயர் :** மக்கள் கவிஞர்
**துணைவியார் :** கௌரவம்மாள்
**பிள்ளை :** க. குமரவேலு
**ஈடுபாடு :** கம்யூனிசம், திராவிட இயக்கம்
**எழுதிய பாடல் :** துன்பம் வெல்லும் கல்வி
**காலம் :** 13.04.1930 முதல் 8.10.1959 வரை

**கற்பவை கற்றபின்**

**1. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

*ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே – நீ*
*ஏன்படித்தோம் என்பதையும் மறந்துவிடாதே*
*நாட்டின் நெறிதவறி நடந்துவிடாதே – நம்*
*நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்து விடாதே*

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக்கூடாது – பண்பு
முறைகளிலும் மொழிதனிலும் மாறக் கூடாது
மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக்கூடாது – தன்
மானமில்லாக் கோழையுடன் சேரக் கூடாது
துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேணும் – நீ
சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேணும்
வம்பு செய்யும் குணமிருந்தால் விட்டிட வேணும் – அறிவு
வளர்ச்சியிலே வான்முகட்டைத் தொட்டிட வேணும்

வெற்றிமேல் வெற்றிவர விருதுவர பெருமைவர
மேதைகள் சொன்னதுபோல் விளங்கிட வேண்டும்
பெற்ற தாயின் புகழும் நீ பிறந்த மண்ணின் புகழும்
வற்றாமல் உன்னோடு வாழ்ந்திட வேண்டும்

**– பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

---

**2. நூலகத்திற்குச் சென்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய வேறு பாடல் ஒன்றை எழுதி வருக.**

தூங்காதே தம்பி தூங்காதே – நீயும்
சோம்பேறி என்ற பெயர் வாங்காதே
நீ ..... தாங்கிய உடையும் ஆயுதமும் – பல
சரித்திரக் கதை சொல்லும் சிறைக் கதவும்
சக்தியிருந்தால் உனைக்கண்டு சிரிக்கும் – சத்திரந்தான்
உனக்கு இடம் கொடுக்கும்
நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானுங் கெட்டார்;
சிலர் அல்லும் பகலும் தெருக்கல்லாயிருந்துவிட்டு
அதிர்ஷ்டமில்லையென்று அலட்டிக் கொண்டார்

விழித்துக்கொண்டோரெல்லாம் பிழைத்துக்கொண்டார் – உன்போல்
குறட்டைவிட்டோரெல்லாம் கோட்டைவிட்டார்
போர்ப்படைகளில் தூங்கியவன் வெற்றியிழந்தான் – உயர்
பள்ளியில் தூங்கியவன் கல்வியிழந்தான்
கடைதனில் தூங்கியவன் முதல் இழந்தான் – கொண்ட
கடமையில் தூங்கியவன் புகழ் இழந்தான்
இன்னும் பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் – பல
பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**3. "ஏட்டுக் கல்வி மட்டும் கல்வி இல்லை" என்னும் தலைப்பில் பேசுக.**

**உரை வெற்றிச் செல்வன் :**

**முன்னுரை :** வணக்கத்திற்குரிய தமிழ் ஆசிரியர் அவர்களே, வகுப்புத் தோழர்களே வணக்கம், ஏட்டுக் கல்வி மட்டும் கல்வி இல்லை என்னும் தலைப்பில் எனது உரையைத் தொடங்குகிறேன்.

"கைத் தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்" – என்று நாமக்கல் கவிஞர் பாடியுள்ளார்.

**முக்கியத்துவம் :** ஏட்டுக் கல்வி என்பது புத்தகங்களின் மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்வது. ஆனால், வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்கள் அனைத்தையும் உருவாக்கிக் கொள்வதற்குரிய முறைகளைப் பயிற்றுவிப்பதே தொழிற்கல்வி ஆகும்.

**தொழிற்கல்வி :** ஏட்டுக் கல்வியுடன் தொழிற்கல்வியும் இணைந்தால் உற்பத்தித் திறன் மேம்படும். தற்போது தொழில் மையக்கல்வியைத் தமிழ்நாடு அரசு செயற்படுத்தி வருகிறது. இதன் மூலம் உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்கும் மாணவன் தையல், மிதி வண்டி பழுது பார்த்தல், கடிகாரம் பழுது பார்த்தல், மின் பொருள்கள் தயாரித்தல், தச்சு வேலை, வீட்டு அறிவியல், பல்பொடி, வழலைக் கட்டி தயாரித்தல், ஊதுவத்தி தயாரித்தல், நறுமணப் பொடி தயாரித்தல் முதலிய 52 வகைத் தொழிற்பிரிவுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துத் திறமை பெற முடியும்.

**பயன்கள் :** மாணவர்கள் தம் தொழில்நுட்ப அறிவால், நம் நாடு இறக்குமதி செய்யும் பொருள்களான மருந்துகள், கணினி, அலைபேசி, மின்கலன், இயந்திரங்கள், விமானம், கப்பல் போன்ற பொருள்களை உற்பத்தி செய்யமுடியும். அதனால் இறக்குமதி செய்யும் நிலை நீங்கிவிடும். பிற நாடுகளுக்கு ஏற்றுமதி அதிகரிக்கும். அதன் மூலம் அந்நியச் செலவாணி கிடைக்கும். வறுமையை நீக்கிக் கொள்ள முடியும்.

**முடிவுரை :**தொழில் வளர்ச்சியின் வாயிலாக நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்துவிடும். பொருள் உற்பத்திப் பெருகப் பெருக விலைகள் குறையும்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.TrbTnpsc.com



## உரைநடைஉலகம்

## இயல் ஒன்று 1.3. கல்விக் கண் திறந்தவர்

### மனவரைபடம்




### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடு மேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம்**

அ) ஆடு மேய்க்க ஆள் இல்லை

ஆ) ஊரில் பள்ளிக்கூடம் இல்லை

இ) வழி தெரியவில்லை

ஈ) பேருந்து வசதியில்லை

**விடை: ஆ) ஊரில் பள்ளிக்கூடம் இல்லை**

**2. பசியின்றி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) பசி + இன்றி ஆ) பசி + யின்றி

இ) பசு + இன்றி ஈ) பசு + யின்றி

**விடை : அ) பசி + இன்றி**

**3. படிப்பறிவு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) படி + அறிவு ஆ) படிப்பு + அறிவு

இ) படி + வறிவு ஈ) படிப்பு + வறிவு

**விடை :ஆ) படிப்பு + அறிவு**

**4. காடு + ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) காட்டாறு ஆ) காடாறு

இ) காட்டுஆறு ஈ) காடுஆறு

**விடை : அ) காட்டாறு**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**அ. வகுப்பு**

**விடை :** நான் ஆறாம் **வகுப்பு** படிக்கிறேன்

**ஆ. உயர்கல்வி**

**விடை :** மாணவர்கள் **உயர்கல்விப்** பெறப் பல கல்லூரிகளை காமராஜர் தொடங்கினார்

**இ. சீருடை**

**விடை :** காமராஜர், குழந்தைகள் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்க **சீருடைத்** திட்டத்தை அறிமுகப்படுத்தினார்

---

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. குழந்தைகள் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்க.................. அறிமுகப்படுத்தினார் **விடை : சீருடைத் திட்டத்தை**
2. காமராசரைக் "கல்விக் கண் திறந்தவர்" என மனதாரப் பாராட்டியவர்........... **விடை : தந்தை பெரியார்**

---

**குறுவினா :**

**1. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை ?**

**காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள்:**

பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்.

---

**2. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது ?**

**காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி**

மூடப்பட்டிருந்த ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகளை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.

---

**சிறுவினா :**

**காமராசரின் மதிய உணவுத் திட்டம் குறித்து எழுதுக.**

★ பள்ளி நிகழ்ச்சிஒன்றில் சாப்பிட எதுவும் இல்லாத மாணவன் மயங்கி விழுந்ததை கண்டார்.

★ ஆகையால் படிக்கவரும் மாணவர்களுக்கு ஒருவேளை உணவாவது வழங்க வேண்டும் என்று முடிவு செய்தார்

★ எனவே, காமராசர் மாணவர்கள் பசியின்றிப் படிக்க, உணவுடன் கூடிய கல்வி என்னும் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**சிந்தனை வினா :**

**நீங்கள் முதலமைச்சரானால் கல்வி முன்னேற்றத்திற்காக என்னென்ன திட்டங்களை வகுப்பீர்கள் ?**

1. ஊர்தோறும் பள்ளிகள் உள்ளதுபோல் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி போன்றவற்றை அவரவர்கள் பகுதியிலேயே அதிகளவு அமைப்பேன்
2. பேருந்தில் நெருக்கடியை தவிர்க்க அனைவருக்கும் இருசக்கர வாகனத்தை இலவசமாக வழங்குவேன்.
3. ஏட்டுக் கல்வியுடன் தொழில் கல்வியை புகுத்துவேன்.
4. சுய வேலைவாய்ப்பைத் தரும் பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துவேன்.

## கூடுதல் வினாக்கள்–விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. கர்மவீரர் எனப் போற்றப்படுபவர்**

அ) அறிஞர் அண்ணா ஆ) ஜவஹர்லால் நேரு

இ) அம்பேத்கர் ஈ) காமராசர் **விடை : ஈ) காமராசர்**

**2. பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தவர்.**

அ) காமராசர் ஆ) இராஜாஜி

இ) அரங்கநாதன் ஈ) ஜவஹர்லால் நேரு

**விடை : அ) காமராசர்**

**3. காமராசருக்கு நடுவண் அரசு பாரத ரத்னா விருது வழங்கிய ஆண்டு**

அ) 1952 ஆ) 1949

இ) 1976 ஈ) 1972 **விடை : இ) 1976**

**சிறுவினா :**

**காமராசரின் சிறப்புப் பெயர்களை கூறுக.**

1. பெருந்தலைவர், 2. படிக்காத மேதை, 3. கர்மவீரர்,
4. கறுப்புக் காந்தி, 5. ஏழைப்பங்காளர்,
6. தலைவர்களை உருவாக்குபவர்

## கற்பவை கற்றபின்

**1. காமராசரின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்வு ஒன்றினை அறிந்து வந்து வகுப்பறையில் பேசுக.**

**உரை கலையரசி:**

காமராசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர். ஊழியர் அவர்களைத் தடுப்பதைக் காமராசர் கவனித்தார். உடனே அவர்களை உள்ளே அழைத்தார். "யாரைப் பார்க்க வந்தீங்க ?" என்று அன்புடன் வினவினார். "எங்க அண்ணனுக்குத் தேர்வுக்குப் பணம் கட்ட அம்மாவிடம் வசதியில்லே.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



உங்களைப் பார்த்தால்..." என்று சிறுமி கூறி முடிப்பதற்குள், "அம்மா அனுப்பிவிட்டாரா ?" என்று காமராசர் கேட்டார். "இல்லை நாங்களாகத்தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாகக் கொண்டு போய் வித்துட்டு வருவாங்க. அதில் வரும் வருமானத்தை வச்சுத்தான் எங்களைப் படிக்க வைக்கிறாங்க". என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்டதும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டுவந்து கொடுத்தார்.

மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரைத் தேடி வந்தனர். "ஐயா தேர்வுக்குப் பணம் கட்டியாச்சு. இந்த இரசீதை (பற்றுச் சீட்டை) அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க" என்றனர். அதனைக் கேட்டு காமராசர் மனம் நெகிழ்ந்தார்.

---

**2 தற்போது மாணவர்களுக்கு அரசு அளிக்கும் நலத் திட்டங்களைப் பட்டியலிடுக.**

**மாணவர்களுக்கு அரசு அளிக்கும் விலையில்லா நலத்திட்டங்கள்:**

1. 1 முதல் 3 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு –கரும் எழுத்துப் பலகை
2. 1 முதல் 5 வகுப்பு மாணவர்களுக்கு – வண்ணப் பென்சில்கள்
3. 6 முதல் 10 வகுப்பு மாணவர்களுக்கு
   – கணித உபகரணப் பெட்டி, நிலவரைபட நூல்
4. 1 முதல் 10 வகுப்பு மாணவர்களுக்கு – காலணிகள், மதிய உணவு
5. 1 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு
   – புத்தகப்பை, பேருந்து பயண அட்டை, பாடநூல் புத்தகங்கள்
6. 3 முதல் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு – குறிப்பேடுகள்
7. 1 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு – 2 சீருடைகள்
8. 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு – மிதிவண்டி
9. 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு – மடிக்கணினி

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




## விரிவானம்

**இயல் ஒன்று**

## 1.4. நூலகம் நோக்கி

### மனவரைபடம்




### மதிப்பீடு

**அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.**

**முன்னுரை :** அறிஞர் அண்ணா அவர்களின் 101 ஆம் ஆண்டு பிறந்த நாளாகிய 15.09.2010 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

**சிறப்பு :** சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆசியக் கண்டத்திலேயே இரண்டாவது பெரிய நூலகம் ஆகும். இதன் பரப்பளவு எட்டு ஏக்கர் ஆகும்.

**அமைப்பு :** தரைத்தளத்தில் பார்வைத் திறன் குறைபாடு உடையோர் தொட்டுப் பார்த்துப் படிக்க பிரெய்லி நூல்களும், கேட்டு அறிய ஒலி வடிவ நூல்கள் குறுந்தகடுகளில் உள்ளன. அவர்களுக்கு உதவி செய்யப் பணியாளர்களும், படியெடுக்கும் வசதியும் உண்டு.

எல்லாத் தளத்திற்கும் செல்ல நகரும் படிக்கட்டு வசதி உள்ளது.

**பயன்கள் :** முதல் தளத்தில் இருபது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்லூடகக் குறுந்தகடுகளும், பிற நாடுகளில் இருந்து திரட்டப்பட்ட ஐம்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களும் உள்ளன.

இரண்டாம் தளத்தில் தமிழ் நூல்கள் உள்ளன.

மூன்றாம் தளத்தில் கணினி அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள் உள்ளன.

நான்காம் தளத்தில் பொருளியல், சட்டம், வணிகவியல் கல்வி நூல்கள் உள்ளன.

ஐந்தாம் தளத்தில் கணிதம், அறிவியல், மருத்துவ நூல்கள் உள்ளன.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆறாம் தளத்தில் பொறியியல், வேளாண்மை, திரைப்படக்கலை நூல்கள் உள்ளன.

ஏழாம் தளத்தில் பழமையான ஓலைச் சுவடிகளும், வரலாறு, புவியியல் சுற்றுலா நூல்களும் உள்ளன.

எட்டாம் தளத்தில் நூலகத்தின் நிர்வாகப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளன.

**பிற நூல்கள் :** இங்கு அனைத்துவகைப் போட்டித் தேர்வுகளுக்கும் தேவையான நூல்கள் உள்ளன. மின் நூலகமும் உள்ளது. அனைத்துத் துறை சார்ந்த தரமான மின் நூல்களும் மின் இதழ்களும் உள்ளன.

**வசதி :** இங்குள்ள நூல்களை வீட்டிற்கு எடுத்துச் செல்ல முடியாது. இங்கேயே அமர்ந்துதான் படிக்க வேண்டும். நூலகம் முழுவதுமே குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை :** நூல்நிலையங்களால் மக்களின் அறிவு வளர்கிறது. ஒருவரே பல நூல்களை வாங்க இயலாது. அக்குறையை அண்ணா நூற்றாண்டு நூலகம் போக்குகிறது.

## கூடுதல் வினாக்கள்—விடைகள்

Padasalai

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகம் அமைந்துள்ள இடம்.**

அ) கேரளா ஆ) கர்நாடகம்

இ) தமிழ்நாடு ஈ) திரிபுரா **விடை : இ) தமிழ்நாடு**

**2. அண்ணா நூற்றாண்டு நூலகம் அமைந்துள்ள ஊர்**

அ) சென்னை ஆ) மதுரை

இ) விழுப்புரம் ஈ) தேனி **விடை :அ) சென்னை**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. நூலக விதிகளை உருவாக்கியவர் ................. ஆவார்.
**விடை :இரா.அரங்கநாதன்**

2. பார்வைத் திறன் குறைபாடு உடையோர் தொட்டுப் பார்த்துப் படிக்க உதவுபவை ................. ஆகும். **விடை :பிரெய்லி நூல்கள்**

3. தமிழக அரசு படிப்பதற்கென தொடங்கியுள்ள திட்டம் ................. ஆகும். **விடை :நடமாடும் நூலகம்**

4. அண்ணா நூற்றாண்டு நூலகம் பசுமையாக்கத்திற்கான ................. பெற்றுள்ளது. **விடை : தங்கத்தர சான்று**

**குறுவினா :**

**1. நூலகத்தில் படித்து உயர்நிலை அடைந்தவர்களுள் சிலரைக் கூறுக.**

1. அறிஞர் அண்ணா, 2. ஜவஹர்லால் நேரு,
3. அண்ணல் அம்பேத்கர், 4. காரல் மார்க்ஸ்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. நூலகத்தின் பயன்கள் யாது ?**

★ உலக அறிவை நாம் பெறுவதற்குப் பாடநூல்கள் மட்டும் போதாது.

★ பல்வேறு துறை சார்ந்த நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும்.

★ அதற்குத் துணைபுரிவன நூல்களே ஆகும்.

---

**கற்பவை கற்றபின்**

**1. நூலகங்களில் உள்ள புத்தகங்களில் உங்களுக்குப் பிடித்தமான நூல்களைப் பட்டியலிடுக.**

1. அந்தோணியின் ஆட்டுக்குட்டி – கமலவேலன்
2. ரயிலின் கதை – பெ.நா. அப்புஸ்வாமி
3. சிறுவர் கலைக் களஞ்சியம் – கோ.மா. கோதண்டம்
4. நல்ல நண்பர்கள் – அழ. வள்ளியப்பா
5. குட்டி இளவரசன் – அந்துவான் எக்சுபரி – வெ. ஸ்ரீராம்
6. சிறுவர் நாடோடிக் கதைகள் – கி. ராஜநாராயணன்
7. வாத்து ராஜா – விஷ்ணுபுரம் சரவணன்
8. யானைச் சவாரி – பாவண்ணன்
9. மாகடிகாரம் – விழியன்
10. பனி மனிதன் – ஜெயமோகன்

---

**1. நீங்கள் விரும்பிப் படித்த நூல் குறித்து நண்பனுடன் உரையாடுக.**

**அமுதன்** : நான் நேற்று எனது தந்தையுடன் சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் உள்ள இரண்டாம் தளத்திற்குச் சென்றேன். அங்கு தமிழ் நூல்கள் பல இருந்தன. அதில் திருக்குறள் என்ற நூலை எடுத்துப் படித்தேன்.

**இனியன்** : அதைப்பற்றி எனக்கு விரிவாக கூறவும்.

**அமுதன்** : திருக்குறள் உலகப் பொதுமறை என அழைக்கப் படுகிறது. அதை எழுதியவர் திருவள்ளுவர். உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூலாகும். அதிலுள்ள 133 அதிகாரங்களில் 1330 குறள் பாக்கள் உள்ளன.

அது மூன்று பிரிவுகளைக் கொண்டது.

அது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் எனப்படும்

அதில் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் எந்தக் காலத்திற்கும் அனைவருக்கும் பொருந்தும்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்கண்டு

## இயல் ஒன்று 1.5. இன எழுத்துக்கள்

### மனவரைபடம்

இன எழுத்துக்கள்
- ஒலிக்கும் முயற்சி
- பிறக்கும் இடம்
- வல்லின எழுத்துகள் 6
- மெல்லின எழுத்துகள் 6

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது ?**

அ) மஞ்சள் ஆ) வந்தான்

இ) கல்வி ஈ) தம்பி **விடை: இ) கல்வி**

**2. தவறான சொல்லை வட்டமிடுக.**

அ)கண்டான் ஆ) வென்ரான்

இ) நண்டு ஈ) வண்டு

**விடை: ஆ) வென்ரான்**

Padasalai

**பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.**

| பிழையான சொல் | திருத்தம் |
|---|---|
| 1. தெண்றல் | தென்றல் |
| 2. கன்டம் | கண்டம் |
| 3. நன்ரி | நன்றி |
| 4. மன்டபம் | மண்டபம் |

**சிறு வினா :**

**இன எழுத்துகள் என்றால் என்ன ?**

சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உள்ள எழுத்துக்கள் இன எழுத்துகள் எனப்படும்.

### கூடுதல் வினாக்கள்–விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வல்லின எழுத்துக்களின் எண்ணிக்கை.**

அ) எட்டு ஆ) ஆறு

இ) மூன்று ஈ) ஐந்து **விடை :ஆ) ஆறு**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**2. மெல்லின எழுத்துக்களின் எண்ணிக்கை.**

அ) இரண்டு ஆ) எட்டு

இ) மூன்று ஈ) ஆறு **விடை : ஈ) ஆறு**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இன எழுத்து இல்லாத எழுத்து ............... ஆகும். **விடை : ஆய்தம்**

2. சொற்களில் மெல்லின எழுத்தை அடுத்து அதன் இனமாகிய ............ எழுத்து வரும். **விடை : வல்லின**

**கற்பவை கற்றபின்**

***தங்கப் பாப்பா வந்தாளே!***
***சிங்கப் பொம்மை தந்தாளே!***
***பஞ்சு போன்ற கையாலே!***
***பண்டம் கொண்டு வந்தாளே!***
***பந்தல் முன்பு நின்றாளே!***
***கம்பம் சுற்றி வந்தாளே!***
***தென்றல் காற்றும் வந்ததே!***
***தெவிட்டா இன்பம் தந்ததே!***

**இப்பாடலில் இடம் பெற்றுள்ள இன எழுத்துச் சொற்களை எடுத்து எழுதுக.**

**விடை : தங்க, வந்தாளே, சிங்க, தந்தாளே, பஞ்சு, போன்ற, பண்டம், கொண்டு, பந்தல், நின்றாளே, கம்பம், தென்றல், வந்ததே, தந்ததே**

**இயல் ஒன்று**

## 1.6 மொழியை ஆள்வோம்

**படித்துச் சுவைக்க.**

*யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்*
*சாந்துணையும் கல்லாத வாறு.* ***–குறள்***

*ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்*
*நாற்றிசையும் செல்லாத நாடு இல்லை அந்நாடு*
*வேற்றுநாடு ஆகா தமவே ஆம் ஆயினால்*
*ஆற்று உணா வேண்டுவது இல்.* ***– பழமொழி நானூறு***

Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**தொடர்களை நீட்டித்துப் புதிய தொடர்களை உருவாக்குங்கள்.**
**(எ.கா) பாடம் படித்தான்**

★ வகுப்பில் பாடம் படித்தான்
★ தமிழ் வகுப்பில் பாடம் படித்தான்
★ நேற்று தமிழ் வகுப்பில் பாடம் படித்தான்
★ அவன் நேற்று தமிழ் வகுப்பில் பாடம் படித்தான்

**விடை : மழை பெய்தது**

★ இடியுடன் மழை பெய்தது
★ மாலை இடியுடன் மழை பெய்தது
★ நேற்று மாலை இடியுடன் மழை பெய்தது
★ தேனியில் நேற்று மாலை இடியுடன் மழை பெய்தது

---

**இரு பொருள் தரக்கூடிய சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்கள் அமையுங்கள். (நூல், மாலை, ஆறு, படி)**

**(எ.கா) நூல் :** ஆடை தைக்க உதவுவது நூல்
மூதுரை அற நூல்

**விடை : மாலை :** சூரியன் மறைவது மாலை
கடவுளுக்கு சூட்டுவது மாலை

**ஆறு :** மழை பெய்தால் உருவாகும் ஆறு
ஐந்துக்கு அடுத்து வருவது ஆறு

**படி :** அதிகாலையில் படி
வீட்டு வாசலில் உள்ளது படி

---

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குங்கள்**

| | | |
|---|---|---|
| **ஆசிரியர்**<br><br>**மாணவன்** | **கவிதை**<br><br>**பாடம்** | **எழுதுகிறார்**<br>**எழுதுகிறான்**<br>**படிக்கிறார்**<br>**படிக்கிறான்**<br>**கற்பிக்கிறார்** |

1. ஆசிரியர் கவிதை எழுதுகிறார்
2. ஆசிரியர் கவிதை படிக்கிறார்
3. ஆசிரியர் பாடம் கற்பிக்கிறார்
4. மாணவன் கவிதை எழுதுகிறான்
5. மாணவன் கவிதை படிக்கிறான்
6. மாணவன் பாடம் எழுதுகிறான்
7. மாணவன் பாடம் படிக்கிறான்

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**உரையாடலை நிறைவு செய்யுங்கள்.**

**மாணவர் :** வணக்கம் ஐயா.

**தலைமை ஆசிரியர் :** வணக்கம் மதி உனக்கு என்ன வேண்டும் ?

**மாணவர் :** எனக்கு மாற்றுச் சான்றிதழ் வேண்டும் ஐயா.

**தலைமை ஆசிரியர் :** **எதற்காக மாற்றுச் சான்றிதழ் கேட்கிறாய் ?**

**மாணவர் :** என் தந்தைக்குப் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது ஐயா.

**தலைமை ஆசிரியர் :** அப்படியா! எந்த ஊருக்குப் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது ?

**மாணவர் :** **ஆண்டிப்பட்டி என்ற ஊருக்கு ஐயா.**

**தலைமை ஆசிரியர் :** அங்கு எந்தப் பள்ளியில் சேரப் போகிறாய் ?

**மாணவர் :** **அரசு மேல்நிலைப்பள்ளியில் சேரப் போகிறேன் ஐயா.**

**தலைமை ஆசிரியர் :** **நன்று. உன்னுடன் யாரை அழைத்து வந்துள்ளாய் ?**

**மாணவர் :** அப்பாவை அழைத்து வந்திருக்கிறேன் ஐயா.

---

**கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைவர்களின்பிறந்த நாள் எந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது ?**

**(குழந்தைகள் தினம், மாணவர் தினம், ஆசிரியர் தினம், தேசிய இளைஞர் தினம், கல்வி வளர்ச்சி நாள்)**

1. காமராசர் பிறந்த நாள் **கல்வி வளர்ச்சி நாள்**
2. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் பிறந்த நாள் **ஆசிரியர் தினம்**
3. அப்துல்கலாம் பிறந்த நாள் **மாணவர் தினம்**
4. விவேகானந்தர் பிறந்த நாள் **தேசிய இளைஞர் தினம்**
5. ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் **குழந்தைகள் தினம்**

---

**இன எழுத்துக்கள் அமைந்துள்ள சொற்களை வட்டமிடுங்கள்**

கங்கை, பக்கம், வண்டு, மண்டபம், மங்கை

**விடை:** கங்கை வண்டு மண்டபம் மங்கை

வெந்தயம், தந்தம், பஞ்சு, பச்சை, தக்காளி, மஞ்சள்

**விடை:** வெந்தயம் தந்தம் பஞ்சு மஞ்சள்

கம்பளம், குன்று, காக்கை, செங்கடல், தேங்காய்

**விடை:** கம்பளம் குன்று செங்கடல் தேங்காய்

---

**கீழ்க்காணும் சொற்களுள்அமைந்துள்ள இன எழுத்துகளை எடுத்து எழுதுங்கள்.**

சங்கு, நுங்கு, பிஞ்சு, வஞ்சம், பட்டணம், சுண்டல் , வண்டி, பந்தயம், பந்து, கற்கண்டு, தென்றல், நன்று.

**விடை : ங்கு, ங்கு, ஞ்சு, ஞ்ச, ண்ட, ண்டி, ந்த, ந்து, ண்டு, ன்ற, ன்று**

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும்.**

காமராசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர். ஊழியர் அவர்களைத் தடுப்பதைக் காமராசர் கவனித்தார். உடனே அவர்களை உள்ளே அழைத்தார். "யாரைப் பார்க்க வந்தீங்க ?" என்று அன்புடன் வினவினார். "எங்க அண்ணனுக்குத் தேர்வுக்குப் பணம் கட்ட அம்மாவிடம் வசதியில்லே. உங்களைப் பார்த்தால்..." என்று சிறுமி கூறி முடிப்பதற்குள், "அம்மா அனுப்பிவிட்டாரா ?" என்று காமராசர் கேட்டார். "இல்லை நாங்களாகத்தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாகக் கொண்டு போய் வித்துட்டு வருவாங்க. அதில் வரும் வருமானத்தை வச்சுத்தான் எங்களைப் படிக்க வைக்கிறாங்க". என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்டதும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டுவந்து கொடுத்தார்.

மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரைத் தேடி வந்தனர். "ஐயா தேர்வுக்குப் பணம் கட்டியாச்சு. இந்த இரசீதை (பற்றுச் சீட்டை) அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க" என்றனர். அதனைக் கேட்டு காமராசர் மனம் நெகிழ்ந்தார்.

**1. காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள்....................**

அ) பெற்றோர் ஆ) சிறுவன், சிறுமி

இ) மக்கள் ஈ) ஆசிரியர்கள் **விடை: ஆ) சிறுவன், சிறுமி**

**2. இந்நிகழ்வு சிறுவனது குடும்பத்தின் எப்பண்பை விளக்குகிறது ?**

அ) ஏழ்மை ஆ) நேர்மை

இ) உழைப்பு ஈ) கல்லாமை **விடை :அ) ஏழ்மை**

**3. மறு நாள் குழந்தைகள் வந்ததும் காமராசர் மனம் ....................**

**விடை : நெகிழ்ந்தார்**

**4. சிறுவனும் சிறுமியும் எதற்காகக் காமராசரின் வீட்டிற்கு வந்தனர் ?**

**விடை :** சிறுவனும் சிறுமியும் தேர்வுக்குப் பணம் கட்டுவதற்கு பண உதவிகேட்டு காமராசரின் வீட்டிற்கு வந்தனர்.

**5. காமராசர் செய்த உதவி யாது ?**

**விடை :** காமராசர் தேர்வுக்குப் பணம் கட்ட பணத்தைக் கொடுத்தார்

---

**கட்டுரை எழுதுக.**

**காமராசர் என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரையை எழுதுக.**

**முன்னுரை, இளமைக்காலம், கல்விப் பணி, நிறைவேற்றிய பிற திட்டங்கள், முடிவுரை.**

**முன்னுரை :**

★ கர்மவீரர், கறுப்பு காந்தி என்று அழைக்கப்படும் காமராசர் மிக உயர்ந்த தமிழகத்துக்கு அடித்தளம் அமைத்தவர் ஆவார். அவரால் ஏழைகள் கல்விக் கண் திறந்தனர்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



★ பல தலைவர்களை உருவாக்கியதால் பெருந்தலைவர் என்றழைக்கப்பெற்ற காமராசரை அறிவது மாணவர் கடமைகளுள் ஒன்றாகும்.

**இளமைக் காலம் :**

★ காமராசர் விருதுநகரில் 15.07.1903 ஆம் ஆண்டு குமாரசாமிக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்.

★ அவரது இயற்பெயர் காமாட்சி என்பதாகும். தனது பள்ளிப் படிப்பை சத்ரிய வித்யாசாலா பள்ளியில் தொடங்கினார்.

★ வறுமை காரணமாக ஆறாம் வகுப்பு வரையே கல்வியைக் கற்க முடிந்தது.

★ தந்தை இளமையிலேயே மறைந்ததால் தாய்மாமன் வீட்டிலேயே வளர்ந்தார்.

★ அங்கிருக்கும்போது தேசத் தலைவர்களின் பேச்சால் கவரப்பட்டு அரசியலிலும், சுதந்திரப் போராட்டங்களிலும் கலந்துகொண்டார்.

★ பின்னர் காங்கிரசில் இணைந்தார்

★ 1954 ஆம் ஆண்டு தமிழக முதல்வரானார்

**கல்விப் பணி :**

★ காமராசர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் மூடப்பட்டிருந்த ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகளை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.

★ அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றினார்

★ மாணவர்கள்பசியின்றிப் படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்

★ பள்ளிகளில் ஏற்றத் தாழ்வின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார்

★ மாணவர்கள் உயர்கல்வி பெறப் பல கல்லூரிகளைப் புதிதாகத் தொடங்கினார்

**நிறைவேற்றிய பிற திட்டங்கள் :**

★ ஒன்பது நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றினார்

★ கிண்டி அம்பத்தூர், இராணிப்பேட்டை போன்ற இடங்களில் தொழிற்சாலைகளை அமைத்தார்

★ நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை, சர்க்கரை ஆலை, சிமெண்ட் தொழிற்சாலை, மேட்டூர் காகிதத் தொழிற்சாலைகளை நிறுவினார்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**முடிவுரை :**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற குறளுக்கேற்ப தனது பன்னிரண்டாம் வயது முதல் 02.10.1975 ஆம் ஆண்டு மறையும் வரை உண்மையாய் உழைத்தார்.

எதையும் சேர்க்காமல் மறைந்த காமராசரைப் போற்றுவோம்; நற்பணி ஆற்றுவோம்.

## இயல் ஒன்று 1.7 மொழியோடு விளையாடு

**"கல்விக் கண் திறந்த காமராசர்" இத் தொடரிலுள்ள எழுத்துக்களை மட்டும் பயன்படுத்தி புதிய சொற்களை உருவாக்குங்கள்.**

(எ.கா) கண், திற
கல்வி கவி
கல் விண்

**முறை மாறியுள்ள சொற்களைச் சரியான இடத்தில் பொருத்திச் சொற்றொடரை நிறைவு செய்க.**

1. முளையிலே விளையும் தெரியும் பயிர்

**விடை : விளையும் பயிர் முளையிலே தெரியும்**

2. ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை

**விடை : கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்**

**கீழ்க்காணும் கட்டங்களில் உள்ள இன எழுத்துச் சொற்களை வட்டமிட்டுத் தனியாக எடுத்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ண் | ட | ப | ம் | அ |
| ற | தி | க | ந் | கி | ச |
| கி | பி | ம் | து | ளி | ங் |
| தெ | ன் | ற | ல் | ங் | கு |
| ள் | வி | ம | ஞ் | ச | ள் |

விடை : மண்டபம், பந்து, சங்கு, தென்றல், மஞ்சள், தும்பி

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**செயல்திட்டம்:**

**காமராசர் குறித்த செய்திகள் மற்றும் புகைப்படங்களுடன் ஒரு படத் தொகுப்பு உருவாக்கவும்.**

**பெயர் :** காமராசர்

**இயற் பெயர் :** காமாட்சி

**பிறப்பு :** 15.07.1903

**பிறந்த ஊர் :** விருதுநகர்

**தந்தை :** குமாரசாமி

**தாயார் :** சிவகாமி அம்மையார்

**திருமணம் :** விரும்பவில்லை

**கட்சி :** காங்கிரஸ்

**பங்கேற்ற விடுதலைப் போராட்டங்கள் :**

★ சைமன்குழு எதிர்ப்புப் போராட்டம்

★ உப்புச் சத்தியா கிரகப் போராட்டம்

★ வெள்ளையனே வெளியேறு போராட்டம்

**சென்னையில் முதல்வரான ஆண்டு :** 1954

**தமிழகத்தில் முதல்வர் பதவி :** ஒன்பது ஆண்டுகள்

**மறைவு :** 02.10.1975

**கல்விப் பணி :** இலவசக் கல்விச் சட்டம், மதிய உணவுத் திட்டம்


**காமராசருக்கு தமிழக அரசு செய்த சிறப்புகள் :**

★ மதுரை பல்கலைக் கழகத்திற்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகம் எனப் பெயர் சூட்டப்பட்டது

★ சென்னை மெரினா கடற்கரையில் சிலை

★ கன்னியாகுமரியில் மணி மண்டபம்








Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள் :**

1. கல்வியின் சிறப்பை உணர்ந்துள்ளேன்
2. தொடர்ந்து கல்வி கற்பேன்
3. கல்வியால் எனது இலட்சியத்தை அடைவேன்
4. கல்வியால் சிறந்தவர்களை என் முன்னோடியாகக் கொள்வேன்
5. புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வேன்.

**கலைச்சொல் அறிவோம் :**

| | |
|---|---|
| கல்வி | – *Education* |
| தொடக்கப் பள்ளி | – *Primary School* |
| மேல்நிலைப் பள்ளி | – *Higher Secondary School* |
| நூலகம் | – *Library* |
| மின் படிக்கட்டு | – *Escalator* |
| மின் தூக்கி | – *Lift* |
| மின்னஞ்சல் | – *E - Mail* |
| குறுந்தகடு | – *Compact Disk (CD)* |
| மின்நூலகம் | – *E - Library* |
| மின்நூல் | – *E - Books* |
| மின் இதழ்கள் | – *E - Magazine* |

**இணையத்தில் காண்க**

**1. ஔவையார் என்ற பெயரில் பலர் இருந்திருக்கின்றனர் என்ற செய்தியை இணையத்தில் தேடுக.**

**ஔவையார் 6 பேர் காலவரிசை**

1. சங்க காலம் – கி.பி 2–ஆம் நூற்றாண்டுக்கு முன்
2. இடைக்காலம் – கி.பி 10–ஆம் நூற்றாண்டுக்கு முன்
3. சோழர் காலம் – 12–ஆம் நூற்றாண்டு
4. சமயப் புலவர் – 14–ஆம் நூற்றாண்டு
5. பிற்காலம் –1– 16, 17 –ஆம் நூற்றாண்டு
6. பிற்காலம் – 2 – 17, 18 –ஆம் நூற்றாண்டு

**2. கல்வியின் சிறப்புக் குறித்துக் கூறியுள்ள கல்வியாளர்கள் சிலரின் பெயர்களை இணையத்தில் தேடிப் பட்டியலிடுக.**

**1. நெ.து. சுந்தர வடிவேலு**

**பிறப்பு :** 12.10.1912

**ஊர் :** நெய்யாடுபாக்கம்

**விருது :** பத்மஸ்ரீ தேசிய விருது, 1961 ஆம் ஆண்டு சிறந்த கல்வியாளர்

**சிறப்பு :** கல்வியாளர், தமிழ்ப் பேச்சாளர், எழுத்தாளர், இலக்கிய ஆசிரியர்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நூல்கள் :** சிறுவர்களுக்காக 13 நூல்களை வள்ளுவர் வரிசை என்னும் தலைப்பில் எழுதி உள்ளார்.

**இறப்பு :** 12.04.1993

**2. வே. வசந்தி தேவி**

**பிறப்பு :** 08.11.1938

**ஊர் :** திண்டுக்கல்

**சிறப்பு :** கல்வியாளர், சமூக ஆர்வலர்

**சாதனைகள் :** இந்திய வளர்ச்சி நிறுவனத் தலைவராக அடிமட்டக் குழந்தைகளின் கல்வித் திறன்கள் வளர புதிய கற்றல், கற்பித்தல் முறைகளை உருவாக்கியவர்

---

**3. கல்வியால் உயர்ந்தோரின் பெயர்களை இணையத்தில் தேடிப் பட்டியலிடுக.**

1. சிற்பி பாலசுப்ரமணியம், 2. வா.செ. குழந்தைசாமி,
3. வ.சுப. மாணிக்கம், 4. வே. வசந்தி தேவி

---

**4. கல்வியின் சிறப்புக் கூறும் மேற்கோள்களை இணையத்தில் தேடிப் பயில்க.**

siragu.com>
www.keetru.com>
www.dinamalar.com> news-detail

---

**5. உலகப் புகழ்பெற்ற புத்தகத் திருவிழாக்கள் குறித்து இணையத்தில் தேடி எழுதுக.**

1977 இல் சென்னை மதரசா–இ–ஆசாம் பள்ளியில் முதல் நான்கு புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்ட பிறகு, 1981 ஆம் ஆண்டு இராயப்பேட்டை, சென்னை இல் இருந்த ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடத்தப்பட்டது. சென்னை புத்தகக்கண்காட்சியின் பெருவெற்றியின் காரணத்தால் உதகமண்டலம், பாண்டிச்சேரி, மதுரை, திருப்பூர், ஈரோடு, நெய்வேலி, நாகர்கோயில், காரைக்குடி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன. இத்திருவிழா ஆண்டுதோறும் பத்து நாட்கள் நடக்கிறது. புத்தகத் திருவிழாவில் விற்பனை செய்யப்படும் நூல்களுக்கு விற்பனை விலையில் குறைந்த பட்சம் பத்து விழுக்காடு தள்ளுபடி வழங்கப்படுகிறது.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## இயல் ஒன்று

## 1.8 கட்டுரை

**நூலகம் என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**முன்னுரை, அமைவிடம், வகைகள், அண்ணா நூற்றாண்டு நூலகம், முடிவுரை**

**முன்னுரை :** "கற்றது கையளவு கல்லாதது உலகளவு" என்பர். உலக அறிவை நாம் பெறுவதற்குப் பாடநூல்கள் மட்டும் போதாது. பல்வேறு துறை சார்ந்த நூல்களைத் தேடிப்படிக்க வேண்டும். அதற்கு துணைபுரிவன நூலகங்களே ஆகும்.

**அமைவிடம் :** நூல் நிலையம் எல்லோரும் பயிலக்கூடிய வகையில் பொதுவான இடத்தில் அமைய வேண்டும். அங்கே அமைதி தவழ வேண்டும். வாசகர்கள் அமரந்து படிப்பதற்கேற்ப இருக்கைகள் போதுமான அளவில் அமைய வேண்டும். காற்றோட்ட வசதி வேண்டும். அதனைச்சுற்றி இரைச்சல் இருக்க கூடாது. நூல்களை எடுத்துத்தர பணியாளர்கள் இருக்க வேண்டும்.

**வகைகள்:** நூலகங்கள் மாவட்ட நூலகம், கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம், பகுதி நேர நூலகம், தனியான நூலகம், நடமாடும் நூலகம் எனப் பல வகைப்படும்.

**அண்ணா நூற்றாண்டு நூலகம் :** அறிஞர் அண்ணா அவர்களின் 101 ஆம் ஆண்டு பிறந்த நாளாகிய 15.09.2010 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகம் திறந்து வைக்கப்பட்டது. ஆசியா கண்டத்திலேயே இரண்டாவது பெரிய நூலகம் ஆகும். இதன் பரப்பளவு எட்டு ஏக்கர் ஆகும். தரைத்தளம் மற்றும் எட்டு அடுக்குகளைக் கொண்டது. அங்கு குறுந்தகடுகள், பிறநாட்டு நூல்கள், ஓலைச்சுவடிகள், வரலாறு, புவியியல், சுற்றுலா நூல்கள் என ஐம்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன.அறிஞர்களும், கவிஞர்களும், அறிவியல் சிந்தனையாளர்கள் நூல்களின வடிவில் நமக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களோடு பழகி நம் அறிவை வளர்த்துக் கொள்வோம்.

**முடிவுரை :** நூல் நிலையங்களால் மக்களின் அறிவு வளர்கிறது. ஒருவரே பல நூல்களை வாங்க இயலாது. அக்குறையை நூலகம் போக்குகிறது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கடிதங்கள்

### நூலகம் வேண்டி விண்ணப்பம்

விடுநர் :
க.தமிழரசன்,
எரியோடு – 624 702,
வேடசெந்தூர் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.

பெறுநர் :
இயக்குநர் அவர்கள்,
பொது நூலகத்துறை இயக்ககம்,
அண்ணா சாலை,
சென்னை – 2.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : நூலகம் வேண்டி விண்ணப்பம்

எங்கள் ஊர் சாத்தூர் தாலுகாவில் உள்ளது. இங்குச் சுமார் ஐந்தாயிரம் மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் தம் அறிவை வளர்த்துக் கொள்ளவும், உலகச் செய்திகளை அறிந்து கொள்ளவும் ஒரு நூலகம் தேவை.

நாங்கள் அந்நூலகம் அமைவதற்குரிய கட்டடத்தையும் உறுப்பினர் கட்டணத்துடன் தர முன் வருகிறோம். ஆதலால் எங்கள் ஊரில் நூலகம் அமைத்துத் தருமாறு தங்களை அன்புடன் வேண்டுகிறேன்.

தேதி : ...................................

இப்படிக்கு
க.தமிழரசன்

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**மாற்றுச் சான்றிதழ் வேண்டித் தலைமை ஆசிரியருக்கு விண்ணப்பம்**

அனுப்புநர் :
எ. மதிவாணன்,
ஆறாம் வகுப்பு 'ஆ' பிரிவு,
இளங்கோ உயர்நிலைப்பள்ளி,
மதுரை – 20.

பெறுநர் :
தலைமை ஆசிரியர்,
இளங்கோ உயர்நிலைப்பள்ளி,
மதுரை – 20.

பொருள் : மாற்றுச் சான்றிதழ் கோருதல்

நான் நமது பள்ளியில் ஆறாம் வகுப்பு 'ஆ' பிரிவில் பயின்று வருகிறேன். என் தந்தை அரசுப் போக்குவரத்தில் பணியாற்றி வந்துள்ள நிலையில் அவருக்கு ஆண்டிப்பட்டியில் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது. ஆகவே அங்குள்ள பள்ளியில் சேர வேண்டியுள்ளதால் எனக்கு மாற்றுச் சான்றிதழை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

Padasalai

இப்படிக்கு
தங்கள் பணிவுள்ள மாணவன்
எ.மதிவாணன்

தேதி :
இடம் : மதுரை

பெற்றோர் கையொப்பம்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# செலக்சன்
# தமிழ்
# ஆறாம் வகுப்பு 6
# மூன்றாம் பருவம்

பொருளடக்கம்



| இயல் | | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி * | 173 |
| 1 | நாடு, சமூகம் | 1.1 பாரதம் அன்றைய நாற்றங்கால்* | 175 |
| | அரசு, நிருவாகம் | 1.2 தமிழ்நாட்டில் காந்தி | 181 |
| | புதுமைகள் | 1.3 வேலுநாச்சியார் | 185 |
| | செய்யும்தேசமிது | 1.4 நால்வகைச் சொற்கள் | 190 |
| | | 1.5 மொழியை ஆள்வோம் | 193 |
| | | 1.6 மொழியோடு விளையாடு | 199 |
| | | 1.7 கடிதம் | 201 |
| 2 | அறம்,தத்துவம், | 2.1 பராபரக் கண்ணி* | 202 |
| | சிந்தனை | 2.2 நீங்கள் நல்லவர் | 205 |
| | எல்லாரும் | 2.3 பசிப்பிணி போக்கிய பாவை | 208 |
| | இன்புற | 2.4 பாதம் | 215 |
| | | 2.5 பெயர்ச்சொல் | 218 |
| | | 2.6 மொழியை ஆள்வோம் | 220 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 223 |
| | | 2.8 திருக்குறள்* | 227 |
| | | 2.9 கடிதம் | 230 |
| 3 | மனிதம், | 3.1 ஆசிய ஜோதி | 231 |
| | ஆளுமை | 3.2 மனிதநேயம் | 236 |
| | இன்னுயிர் | 3.3 முடிவில் ஒரு தொடக்கம் | 241 |
| | காப்போம் | 3.4 அணி இலக்கணம் | 243 |
| | | 3.5 மொழியை ஆள்வோம் | 245 |
| | | 3.6 மொழியோடு விளையாடு | 251 |
| | | 3.7 கடிதம் | 256 |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 6 தமிழ்

## மனப்பாடப்பகுதி

## மூன்றாம் பருவம்

**பாரதம் அன்றைய நாற்றங்கால்**

*புதுமைகள் செய்த தேசமிது*
*பூமியின் கிழக்கு வாசலிது!*

*தெய்வ வள்ளுவன் நெய்த குறள்தான்*
*தேசம் உடுத்திய நூலாடை!*
*மெய்களைப் போற்றிய இந்தியத் தாய்க்கு*
*மெய்யுணர்வு என்கிற மேலாடை! (புதுமைகள்)*

*காளி தாசனின் தேனிசைப் பாடல்கள்*
*காவிரிக் கரையில் எதிரொலிக்க*
*கம்பனின் அமுதக் கவிதை களுக்குக்*
*கங்கை அலைகள் இசையமைக்க (புதுமைகள்)*

*கன்னிக் குமரியின் கூந்த லுக்காகக்*
*காஷ்மீர்த் தோட்டம் பூத்தொடுக்கும்!*
*மேற்கு மலைகள் நதிகளை அனுப்பிக்*
*கிழக்குக் கரையின் நலம்கேட்கும்! (புதுமைகள்)*

*புல்வெளி யெல்லாம் பூக்கா டாகிப்*
*புன்னகை செய்த பொற்காலம்!*
*கல்லைக் கூட காவிய மாக்கிக்*
*கட்டி நிறுத்திய கலைக்கூடம்! (புதுமைகள்)*

*அன்னை நாட்டின் அமுத சுரபியில்*
*அன்னிய நாடுகள் பசிதீர*
*அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி*
*அறத்தின் ஊன்று கோலாக*

*புதுமைகள் செய்த தேசமிது*
*பூமியின் கிழக்கு வாசலிது!* **– தாராபாரதி**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பராபரக் கண்ணி**

*1. தம்உ யிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்*
*செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!*

*2. எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!*

**திருக்குறள்**

1. *மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
   *ஆகுல நீர பிற.*
2. *இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
   *நன்னயம் செய்து விடல்.*
3. *பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
   *தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.*

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# செலக்சன்
# 6 தமிழ்
# மூன்றாம் பருவம்


இயல் ஒன்று

## 1. புதுமைகள் செய்யும் தேசமிது

கவிதைப்பேழை

இயல் ஒன்று

## 1.1. பாரதம் அன்றைய நாற்றங்கால்




**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல்**

அ) திருவாசகம் ஆ) திருக்குறள்

இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை

**விடை : ஆ) திருக்குறள்**

**2. காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம்**

அ) காவிரிக் கரை ஆ) வைகைக்கரை

இ) கங்கைக்கரை ஈ) யமுனைக்கரை

**விடை :அ) காவிரிக்கரை**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**3. கலைக்கூடமாகக் காட்சி தருவது**

அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம்

இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்

**விடை : அ) சிற்பக்கூடம்**

**4. நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) நூல் + ஆடை ஆ) நூலா + டை

இ) நூல் + லாடை ஈ) நூலா + ஆட

**விடை : அ) நூல் + ஆடை**

**5. எதிர் + ஒலிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) எதிரலிக்க ஆ) எதிர்ஒலிக்க

இ) எதிரொலிக்க ஈ) எதிர்ரொலிக்க

**விடை : இ) எதிரொலிக்க**

---

**நயம் அறிக**

**பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

**விடை : எதுகைச் சொற்கள் :**

1. தெய்வ – நெய்த
2. மெய்களை – மெய்யுணர்வு
3. தோட்டம் – கேட்கும்
4. அன்னை – அன்னிய
5. சின்ன – ஊன்று
6. தேசமிது – வாசலிது

**விடை : மோனைச் சொற்கள் :**

1. தெய்வ – தேசம்
2. மெய்களை – மெய்யுணர்வு
3. காளிதாசன் – காவிரி
4. கம்பனின் – கங்கை
5. புல்வெளி – புன்னகை
6. அன்னை – அன்னிய

---

**குறுவினா :**

**1. தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1. திருவள்ளுவர் 2. காளிதாசர் 3. கம்பர்

---

**2. இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.**

இந்தியாவின் மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லைவரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிறுவினா :**

**தாராபாரதி பாடலின் கருத்தைச் சுருக்கி எழுதுக.**

★ பூமியின் கிழக்கு வாசலான இந்தியநாடு பல புதுமைகளைச் செய்த தேசமாகும்.

★ அத்தேசம் திருக்குறளை ஆடையாகவும், மெய்யுணர்வை மேலாடையாகவும் அணிந்திருக்கிறது.

★ காளிதாசரின் பாடல்கள் காவிரிக்கரையில் எதிரொலிக்கின்றன.

★ கம்பரின் கவிதைக்கு கங்கை ஆற்றின் அலைகள் இசையமைக்கின்றன.

★ குமரிமுனை கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன.

★ மேற்கு நதிகள் கிழக்கில் பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன.

★ புல்வெளியின் பூக்கள் புன்னகை புரிகின்றன.

★ சிற்பங்கள் கலைக்கூடமாகக் காட்சியளிக்கின்றன.

★ அமுதசுரபியான அன்னை பாரதநாடு மக்களின் பசியை போக்கி வருகின்றது.

★ அறத்தின் ஊன்றுகோலாக காந்தியடிகளின் அகிம்சை விளங்குகின்றது.

---

**சிந்தனை வினா :**

**1. நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மாணவர்கள் செய்யவேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.**

★ நம் நாட்டின் முன்னேற்றம் மாணவர்கள் கையில்தான் உள்ளது. மாணவர்கள் படித்தால் மட்டும் போதாது. தேசியத் தலைவர்கள் மாணவர் பருவத்திலேயே நம் நாட்டு சுதந்திரத்திற்கு போராடியதால்தான் நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடிகிறது

★ இன்றைய காலகட்டத்தில் தீவிரவாதம்தான் நம் நாட்டிற்கு மிகப்பெரும் ஆபத்தாக உள்ளது. தீவிரவாதத்தை முறியடிக்க மாணவர்கள்தான் வேலியாக மாறவேண்டும்

★ தேசப்பற்று இருக்கும்போது நாட்டுநலன் இருக்கும். நம்நாடு பொருளாதாரத்தில் முன்னேற, நம் முன்னாள் ஜனாதிபதியான ஏ.பி.ஜே.அப்துல்கலாம் போன்று விஞ்ஞானியாக மாணவர்கள் மாற அறிவியலைக் கற்க வேண்டும்.

★ சுயநலமற்ற தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவர்களாக உருவாக வேண்டும்

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினாக்கள்–விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**1. மெய் என்னும் சொல்லின் பொருள்**

அ) பொறுமை ஆ) கோபம்
இ) பொய் ஈ) உண்மை **விடை : ஈ) உண்மை**

**2. தேசம் என்னும் சொல்லின் பொருள்**

அ) நாடு ஆ) வழி
இ) உழவு ஈ) ஒப்புரவு **விடை : அ) நாடு**

**3. தாராபாரதியின் அடைமொழி**

அ) பாவலரேறு ஆ) கவிஞாயிறு
இ) கவிமணி ஈ) புரட்சிக்கவி

**விடை :ஆ) கவிஞாயிறு**

---

**சிறுவினா**

**தாராபாரதி குறிப்பு தருக :**

**ஆசிரியர் குறிப்பு :**

**பெயர் :** தாராபாரதி

**இயற்பெயர் :** இராதாகிருஷ்ணன்

**பிறந்த ஊர் :** திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள குவளை என்னும் சிற்றூர்

**தந்தை :** துரைசாமி

**தாயார் :** புஷ்பம் அம்மாள்

**துணைவியார் :** சந்தானலெட்சுமி

**புதல்வர்கள் :** விவேகானந்தன் மற்றும் லோகுதுரை

**அடைமொழி :** கவிஞாயிறு

**இயற்றிய நூல்கள் :** புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல்நுனி வெளிச்சம்

**இயற்றிய பாடல் :** பாரதம் அன்றைய நாற்றங்கால்

**காலம் :** 26.02.1947 முதல் 13.05.2000 வரை

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கற்பவை கற்றபின்**

**1. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலை இசையோடு பாடுக.**

*புதுமைகள் செய்த தேசமிது*
*பூமியின் கிழக்கு வாசலிது!*

*தெய்வ வள்ளுவன் நெய்த குறள்தான்*
*தேசம் உடுத்திய நூலாடை!*
*மெய்களைப் போற்றிய இந்தியத் தாய்க்கு*
*மெய்யுணர்வு என்கிற மேலாடை! (புதுமைகள்)*

*காளிதாசனின் தேனிசைப் பாடல்கள்*
*காவிரிக் கரையில் எதிரொலிக்க*
*கம்பனின் அமுதக் கவிதை களுக்குக்*
*கங்கை அலைகள் இசையமைக்க (புதுமைகள்)*

*கன்னிக் குமரியின் கூந்த லுக்காகக்*
*காஷ்மீர்த் தோட்டம் பூத்தொடுக்கும்!*
*மேற்கு மலைகள் நதிகளை அனுப்பிக்*
*கிழக்குக் கரையின் நலம்கேட்கும்! (புதுமைகள்)*

*புல்வெளி யெல்லாம் பூக்கா டாகிப்*
*புன்னகை செய்த பொற்காலம்!*
*கல்லைக் கூட காவிய மாக்கிக்*
*கட்டி நிறுத்திய கலைக்கூடம்! (புதுமைகள்)*
*அன்னை நாட்டின் அமுத சுரபியில்*
*அன்னிய நாடுகள் பசிதீர*
*அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி*
*அறத்தின் ஊன்று கோலாக*

*புதுமைகள் செய்த தேசமிது*
*பூமியின் கிழக்கு வாசலிது! –தாராபாரதி*

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2.நாட்டு முன்னேற்றத்தில் நம் பங்கு" என்னும் தலைப்பில் பேசுக.**

**உரை : கண்ணன்**

வணக்கத்திற்குரிய வகுப்பாசிரியர் அவர்களே! இனிய நண்பர்களே! வணக்கம்.

எதிர்காலம் பற்றிய கனவு கண்டு அதை அடைய வேண்டும் என்று கூறிய அப்துல்கலாம் அவர்களை வணங்கி நாட்டு முன்னேற்றத்தில் நம் பங்கு என்னும் தலைப்பில் என் உரையாடலைத் தொடங்குகின்றேன்.

**முன்னுரை :** நம் நாட்டின் முன்னேற்றம் மாணவர்கள் கையில்தான் உள்ளது. மாணவர்கள் படித்தால் மட்டும் போதாது. தேசியத் தலைவர்கள் மாணவர் பருவத்திலேயே நம் நாட்டு சுதந்திரத்திற்கு போராடியதால்தான் நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடிகிறது

**தேசப்பற்று :** இன்றைய காலகட்டத்தில் தீவிரவாதம்தான் நம் நாட்டிற்கு மிகப்பெரும் ஆபத்தாக உள்ளது. தீவிரவாதத்தை முறியடிக்க மாணவர்கள்தான் வேலியாக மாறவேண்டும். ஒழுக்கம், தேப்பற்று இல்லாததால்தான் பிரச்சனைகள் நடக்கின்றன. தேசப்பற்று இருக்கும்போது நாட்டுநலன் இருக்கும்.

**விஞ்ஞானி :** நம்நாடு பொருளாதாரத்தில் முன்னேற, நம் முன்னாள் ஜனாதிபதியான ஏ.பி.ஜே. அப்துல்கலாம் போன்று விஞ்ஞானியாக மாணவர்கள் மாற அறிவியலைக் கற்க வேண்டும். இயற்கையை சிதைக்காத விஞ்ஞானத்தை மாணவர்கள் படைக்கவேண்டும்.

**தலைவர் :** சுயநலமற்ற தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவர்களாக உருவாக வேண்டும்.

**முடிவுரை :**ஏழ்மையை போக்கும் பொருளாதாரக் கல்வியை கற்றிட வேண்டும். பாடத்திட்டத்தைத் தாண்டி ஒழுக்கம், பொது அறிவை கற்க வேண்டும். சமுதாயப் பொறுப்புமிக்கவர்காளக நாம் உருவானால் நாடு வளர்ச்சி பெறும். நன்றி வணக்கம்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.TrbTnpsc.com



## உரைநடை உலகம்

**இயல் ஒன்று**

## 1.2. தமிழ்நாட்டில் காந்தி




### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்**

அ) கோவை ஆ) மதுரை

இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

**விடை : ஆ) மதுரை**

**2. காந்தியடிகள் எந்தப் பெரியவரின் அடிநிழலில் இருந்து தமிழ் கற்கவேண்டும் என்று விரும்பினார் ?**

அ) நாமக்கல் கவிஞர் ஆ) திரு.வி.க.

இ) உ.வே.சா. ஈ) பாரதியார்

**விடை : இ) உ.வே.சா**

**பொருத்துக:**

1. இலக்கிய மாநாடு – பாரதியார்
2. தமிழ்நாட்டுக் கவிஞர் – சென்னை
3. குற்றாலம் – ஜி.யு. போப்
4. தமிழ்க்கையேடு – அருவி

**விடை :**

| | | |
|---|---|---|
| **1. இலக்கிய மாநாடு** | – | **சென்னை** |
| **2. தமிழ்நாட்டுக் கவிஞர்** | – | **பாரதியார்** |
| **3. குற்றாலம்** | – | **அருவி** |
| **4. தமிழ்க்கையேடு** | – | **ஜி.யு. போப்** |

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**1. ஆலோசனை 2. பாதுகாக்க 3. மாற்றம் 4. ஆடம்பரம்**

**விடை :** 1. பெரியவர்களின் **ஆலோசனை**யைக் கேட்டு நடக்க வேண்டும்.

2. இயற்கையைப் **பாதுகாக்க** வேண்டியது நம் கடமை

3. காந்தியடிகள் தமிழ்நாட்டில் உடை **மாற்றம்** கொண்டார்

4. காந்தியடிகள் வெளிநாட்டு **ஆடம்பர** பொருள்களை வெறுத்தார்

---

**குறுவினா :**

**1. காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை ?**

காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் முதலில் எல்லா மக்களுக்கும் செல்ல உரிமை மறுக்கப்பட்டதால் நுழையவில்லை.

---

**2. காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக.**

★ 1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு நடைபெற்றது.

★ அப்பொழுது உ.வே. சாமி நாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார்.

★ அந்நிகழ்வால் அந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்ற ஆர்வம் காந்தியடிகளுக்கு ஏற்பட்டது.

---

**சிறுவினா :**

**1. காந்தியடிகள் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.**

★ 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காந்தியடிகள் புகைவண்டியில் மதுரைக்குச் சென்றார்

★ செல்லும் வழியில் பெரும்பாலான மக்கள் இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே அணிந்து இருப்பதைக் கண்டார்.

★ அப்போது காந்தியடிகள் நீளமான வேட்டி, மேல்சட்டை, பெரிய தலைப்பாகை அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்

★ பெரும்பாலான இந்தியர்கள் போதிய உடைகள் இல்லாமல் இருக்கிறார்கள் என்று சிந்தித்தார்

★ அன்றுமுதல் வேட்டியும் துண்டும் மட்டுமே அணியத் தொடங்கினார்.

---

Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பினை எழுதுக.**

★ காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கினார்

★ ஜி.யு. போப் எழுதிய தமிழ்க் கையேடு தம்மைக் கவர்ந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

★ திருக்குறள் அவரைக் கவர்ந்த நூலாகும்

★ 1937 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த இலக்கிய மாநாட்டில் உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் அந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்கவேண்டும் என்ற ஆர்வம் காந்தியடிகளுக்கு ஏற்பட்டது.

---

**சிந்தனை வினா :**

**1. காந்தியடிகளிடம் காணப்படும் உயர்ந்த பண்புகளாக நீங்கள் கருதுபவை யாவை ?**

**காந்தியடிகளின் உயர்ந்த பண்புகள் :**

★ பாரதியாரை இந்திய நாட்டின் சொத்து எனக் கூறினார்.

★ பெரும்பாலான மக்களின் உடையைக் கண்டு வருந்தி வேட்டியும் துண்டும் மட்டுமே அணியத் தொடங்கினார்.

★ ஆடம்பரத்தையும், வெளி நாட்டுப் பொருள்களையும் வெறுத்தார்.

★ அனைத்து இன மக்களும் கோவிலுக்குள் செல்ல உரிமை உண்டு என வலியுறுத்தி தீண்டாமையை வெறுத்தார்.

★ தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் தமிழை கற்றார்.

★ ஜி.யு. போப் எழுதிய தமிழ்க் கையேடும், திருக்குறளும் தம்மைக் கவர்ந்ததாகக் குறிப்பிட்டு உள்ளார்.

★ அறவழியில் போராட்டங்களை நடத்தினார்.

★ ஏற்றத் தாழ்வு அற்ற சமுதாயம் மலரவேண்டும் என்று உறுதியாக இருந்தார்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினாக்கள்–விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பாரதியாரை "தமிழ் நாட்டுக் கவிஞர்" என்று கூறியவர்**

அ) இராஜாஜி ஆ) திரு.வி.க.
இ) காந்தியடிகள் ஈ) இராஜாஜி **விடை : ஈ) இராஜாஜி**

**2. காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்த ஆண்டு**

அ) 1921 ஆ) 1919
இ) 1937 ஈ) 1945 **விடை : அ) 1921**

**3. 1937 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இலக்கிய மாநாட்டின் வரவேற்புக் குழுவின்தலைவர் யார் ?**

அ) வ.உ.சி ஆ) பாரதியார்
இ) இராசாசி ஈ) உ.வே.சா **விடை : ஈ) உ.வே.சா**

---

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

**1.** ஆங்கிலேயர்களால் ரௌலட் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட ஆண்டு .................... **விடை : 1919**

**2.** காந்தியடிகளின் தோற்றத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய மாநிலம் .................... ஆகும். **விடை :தமிழ்நாடு**

**3.** தமிழ்நாட்டில் காந்தி ஆசிரமம் சேலம் மாவட்டத்தில் ............... இடத்தில் உள்ளது. **விடை : புதுப்பாளையம்**

**4.** காந்தியடிகள் மறைந்த தினமாகிய ஜனவரி 30 ஆண்டுதோறும் ........... தினமாக அனுசரிக்கப்படுகிறது. **விடை : தியாகிகள்**

---

## கற்பவை கற்றபின்

**1. காந்தியடிகளின் பொன்மொழிகளைத் திரட்டுக.**

1. தவறுகளை ஒப்புக்கொள்ள மறுப்பதைவிடப் பெரிய அவமானம் எதுவுமில்லை.
2. நல்ல நண்பனை விரும்பினால் நல்ல நண்பனாய் இரு.
3. எப்போதும் உண்மையை மறைக்காது சொல்லக்கூடிய மனத்திடம் வேண்டும்.
4. மாணவனுக்குச் சிறந்த பாடப்புத்தகம் அவனுடைய ஆசானே என்பது உறுதியான நம்பிக்கை.
5. பயத்தினால் பீடிக்கப்பட்ட மனிதன் கடவுளை ஒருநாளும் அடைய முடியாது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




**2. காந்தியடிகள் நடத்திய அறவழிப் போராட்டங்களின் பெயர்களைத் தொகுக்க.**

1. 1919 – ரௌலட் சட்டம் எதிர்ப்பு
2. 1920 – ஒத்துழையாமை இயக்கம்
3. 1922– சௌரி சௌரா போராட்டம்
4. 1930 – உப்புச் சத்தியாக்கிரகம் (தண்டி யாத்திரை), சட்ட மறுப்பு இயக்கம்
5. 1942 – வெள்ளையனே வெளியேறு இயக்கம்

## விரிவானம்

**இயல் ஒன்று**

## 1.3. வேலுநாச்சியார்




Padasalai

### மதிப்பீடு

**1. வேலுநாச்சியார் ஐதர் அலியின் உதவியை எவ்வாறு பெற்றார் ?**

★ வேலு நாச்சியார் சிவகங்கையை மீட்க ஐதர் அலியின் படைஉதவி தேவைப்பட்டது.

★ எனவே வேலுநாச்சியாரும், அமைச்சர் தாண்டவராயனும் ஐதர்அலியைச் சந்திக்க மைசூர் சென்றனர்.

★ அங்கு ஐதர்அலியிடம் படை உதவி கேட்டு வேலுநாச்சியார் உருது மொழியில் பேசினார்.

★ அதனால் ஐதர்அலி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

★ வேலுநாச்சியாரின் பன்மொழி அறிவால் ஐதர்அலியின் படை உதவி கிடைத்தது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.**

★ வேலுநாச்சியாரின் படைவீரர்களுடன் ஐதர்அலியின் ஐயாயிரம் குதிரைப் படை வீரர்களும் சேர்ந்தனர்.

★ ஆண்கள் படைப்பிரிவிற்கு மருது சகோதரர்களும், பெண்கள் படைப் பிரிவிற்கு குயிலியும் தலைமை ஏற்றனர்.

★ விசயதசமித் திருநாளன்று சிவகங்கை கோட்டைக் கதவுகள் திறக்கப்படும் அன்று பெண்களுக்கு மட்டுமே அனுமதி உண்டு.

★ பெண்கள் பிரிவினர் கூடைகளில் பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் ஆயுதங்களையும் மறைத்துக்கொண்டு கோட்டைக்குச் சென்றனர்.

★ உள்ளே சென்றதும் குயிலி தம் உடலில் தீ வைத்துக்கொண்டு ஆயுதக் கிடங்குக்குள் குதித்துவிட்டார்.

★ தீ எரிவது தெரிந்ததும் ஆண்கள் படைப்பிரிவினர் வேலுநாச்சியார் ஆணைப்படி கோட்டைக்குள் சென்றனர்.

★ ஆங்கிலேயரின் படையுடன் கடுமையாகப் போரிட்டனர்.

★ இறுதியில் ஆங்கிலப்படை தோல்வியடைந்து கோட்டையை விட்டு ஓடியது.

★ வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர்அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

Padasalai

## கூடுதல் வினாக்கள்–விடைகள்

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு...............

**விடை : 1780**

2. வேலுநாச்சியாரின் காலம் ...............

**விடை : 1730–1796**

3. ஜான்சிராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்தவர்...............

**விடை : வேலுநாச்சியார்**

4. ............... அன்று வேலுநாச்சியாருக்கு இந்திய அரசு தபால் தலை வெளியிட்டது. **விடை : 31.12.2008**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

**இக்கதையை நாடகமாக வகுப்பறையில் நடித்துக் காட்டுக.**

இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்

காளையார்கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின்:

**காட்சி 1**

**இடம் :** திண்டுக்கல் கோட்டை

**பங்குகொண்டவர்கள் :** வீரமங்கை வேலுநாச்சியார், அமைச்சர் தாண்டவராயர், தளபதிகளாகிய பெரியமருது, சின்னமருது, குறுநில மன்னர்கள்

**வேலுநாச்சியார்** : நாம் சிவகங்கையை இழந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன

**அமைச்சர் தாண்டவராயர்** : "கவலைப்படாதீர்கள் அரசியாரே, நாம் சிவகங்கையை மீட்கும் நாள் நெருங்கிவிட்டது".

**வேலுநாச்சியார்** : அந்த இனிய நாளைத்தான் நானும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன்.

அப்போது வெளியே பெரும் ஆரவாரம் கேட்டது.

**வேலுநாச்சியார்** : மைசூரிலிருந்து ஐதர்அலி அனுப்பிய படை வந்து விட்டது என்று நினைக்கிறேன்.

**வீரன்** : அரசியாருக்கு வணக்கம். மைசூரில் இருந்து ஐயாயிரம் குதிரைப் படை வீரர்கள் வந்துள்ளனர்.

**வேலுநாச்சியார்** : அப்படியா ? மகிழ்ச்சி. அவர்களை ஓய்வு எடுக்கச் சொல் . நான் பிறகு வந்து பார்க்கிறேன். வீரன் வெளியேறினான்

**அமைச்சர் தாண்டவராயர்** : ஐதர்அலி உறுதியாகப் படையை அனுப்புவார் என்று எனக்கு முன்பே தெரியும் அரசியாரே

**வேலுநாச்சியார்** : எதனால் அப்படிச் சொல்கிறீர்கள் ?

**அமைச்சர் தாண்டவராயர்** : நாம் இருவரும் ஐதர் அலியைச் சந்திக்க மைசூர் சென்றோம் அல்லவா ? அப்போது தாங்கள் அவரிடம் உருதுமொழியில் பேசினீர்கள். அப்போது அவர் முகத்தில் பெரிய மகிழ்ச்சி தோன்றியதை நான் கண்டேன்

**சின்னமருது** : நம் அரசியாரின் பன்மொழி அறிவு நமக்குப் பெரிய நன்மையைத் தந்திருக்கிறது

**பெரியமருது :** ஆம். நமது வீரர்களுடன் ஐதர்அலியின் ஐயாயிரம் குதிரைப் படை வீரர்களும் சேர்ந்து விட்டனர். ஆகவே நாளை சிவகங்கையை மீட்கப் புறப்படலாம் அல்லவா ?

**வேலுநாச்சியார் :** என் கணவர் கொல்லப்பட்ட ஊர் காளையார் கோவில். எனவே நாம் முதலில் காளையார் கோவிலைக் கைப்பற்றுவோம். பிறகு சிவகங்கையை மீட்போம்.

அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டனர். மறுநாள் காளையார்கோவில் நோக்கி வேலுநாச்சியார் படை புறப்பட்டது. ஆண்கள் படைப்பிரிவிற்கு மருது சகோதரர்களும், பெண்கள் படைப்பிரிவிற்குக் குயிலியும் தலைமை ஏற்றனர்.

காளையார்கோவிலில் வேலு நாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் ஆங்கிலேயரின் படை தோற்று ஓடியது.

**காட்சி 2**

**இடம் :** காளையார்கோவில்

**பங்குகொண்டவர்கள் :** வீரமங்கை வேலுநாச்சியார், அமைச்சர் தாண்டவராயர், தளபதிகளாகிய பெரியமருது, சின்னமருது

**பெரியமருது :** அரசியார் அவர்களே! காளையார்கோவில் நம் கைக்கு வந்துவிட்டது. நாம் இப்போதே சிவகங்கைக் கோட்டையைத் தாக்கினால் ஆங்கிலேயரை விரட்டியடித்துவிடலாம்.

**வேலுநாச்சியார் :** அவசரம் வேண்டாம். இப்போது சிவகங்கை கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும். வரும் விசயதசமித் திருநாள் அன்று கதவுகள் திறக்கப்படும். அப்போது நமது படைகள் உள்ளே நுழையலாம்.

**சின்னமருது :** அப்போதும் பெரிய காவல் இருக்குமே

**வேலுநாச்சியார் :** விசயதசமி நாளில் கோட்டைக்குள் செல்வதற்குப் பெண்களுக்கு மட்டும் அனுமதி உண்டு. நமது பெண்கள் பிரிவினர் கூடைகளில் பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் ஆயுதங்களையும் மறைத்துக் கொண்டு கோட்டைக்குள் செல்லட்டும். உள்ளே அவர்கள் தாக்குதலைத் தொடங்கியதும் நமது ஆண்கள் பிரிவினரும் கோட்டைக்குள் நுழைந்து தாக்கட்டும். ஆங்கிலேயரை விரட்டி அடித்துவிடலாம்.

**அமைச்சர் தாண்டவராயர் :** அப்படியே செய்யலாம் அரசியாரே. இன்னும் ஒரு செய்தி. தங்களைக் காட்டிக் கொடுக்குமாறு உடையாள் என்னும் பெண்ணை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினார்களாம். அவள் மறுத்ததால் கொன்று விட்டார்களாம். அவளுக்கு நாம் உரிய முறையில் சிறப்புச்செய்ய வேண்டும்.

Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**வேலுநாச்சியார் :** அவருக்கு ஒரு நடுகல் நடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே. அவரது பெருமையை எல்லோரும் அறிந்து கொள்ளட்டும்.

**அமைச்சர் தாண்டவராயர் :** அப்படியே செய்வோம் படை மறுநாள் காலை சிவகங்கையை அடைந்தது.

**காட்சி 3**

**இடம் :** சிவகங்கை

**பங்குகொண்டவர்கள் :** வீரமங்கை வேலுநாச்சியார், குயிலி, படைகள்

**குயிலி :** அரசியாரே, நான் நமது பெண்கள் படைப்பிரிவுடன் மாறுவேடத்தில் உள்ளே செல்கிறேன். உள்ளே சென்றதும் அங்குள்ள ஆயுதக் கிடங்கிற்கு எப்படியாவது தீ வைத்துவிடுகிறேன். தீ எரிவது தெரிந்ததும் நம் படை உள்ளே நுழையட்டும்.

**வேலுநாச்சியார் :** அப்படியே ஆகட்டும்

குயிலியும் பெண்கள் படையினரும் கோட்டைக்குள் சென்றனர். சிறிது நேரத்தில் கோட்டைக்குள் பெரும் கூச்சல் எழுந்தது. உள்ளே உயரமாகத் தீ எரிவது தெரிந்தது

**வேலுநாச்சியார் :** நமது படை உள்ளேநுழையட்டும்

படைவீரர்கள் கோட்டைக்குள் பாய்ந்து சென்றனர். ஆங்கிலேயரின் படையுடன் கடுமையாகப் போரிட்டனர். இறுதியில் ஆங்கிலப்படை தோல்வியடைந்து கோட்டையை விட்டு ஓடியது.

**வீரர்கள் :** வெற்றி, வெற்றி

**வேலுநாச்சியார் :** இந்த வெற்றிக்குக் காரணமாக குயிலி எங்கே ?

**வீரர்கள் :** குயிலி தம் உடலில் தீ வைத்துக்கொண்டு ஆயுதக் கிடங்குக்குள் குதித்துவிட்டார்.

**வேலுநாச்சியார் :** குயிலி தம் உயிரைத் தந்து நம் நாட்டை மீட்டுக் கொடுத்திருக்கிறார். அவரது துணிவுக்கும் தியாகத்திற்கும் வீரத்திற்கும் தலை வணங்குகிறேன்.

வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர்அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்கண்டு

**இயல் ஒன்று**

## 1.4. நால்வகைச் சொற்கள்




### மதிப்பீடு

**சொல்வகையை அறிந்து பொருந்தாச் சொல்லை வட்டமிடுக.**

1. அ) படித்தாள் ஆ) ஐ இ) மற்று ஈ) கு

விடை : அ)படித்தாள்

2. அ) மதுரை ஆ) கால் இ) சித்திரை ஈ) ஓடினான்

விடை : ஈ) ஓடினான்

3. அ) சென்றான் ஆ) வந்த இ) சித்திரை ஈ) நடந்த

விடை : இ) சித்திரை

4. அ) மாநாடு ஆ) ஐ இ) உம் ஈ) மற்று

விடை : அ)மாநாடு

### குறுவினா.

**1. சொல் என்றால் என்ன ?**

★ தமிழில் சில எழுத்துகள் தனித்து நின்று பொருள் தரும்

★ ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தும் பொருள் தரும்

இவ்வாறு பொருள் தருபவை சொல் எனப்படும்.

★ (எ.கா) ஈ, பூ, மை, கடல், கல், தங்கம்

**2. சொற்களின் வகைகளை எழுதுக.**

இலக்கண அடிப்படையில் சொற்கள் நான்கு வகைப்படும். அவை

1. பெயர்ச்சொல், 2. வினைச் சொல், 3. இடைச்சொல், 4. உரிச்சொல்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**3. பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்களை எவ்வாறு வழங்குகிறோம் ?**

பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்களை இடைச் சொல் என்று வழங்குகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| (எ.கா) | உம் | – | தந்தையும் தாயும் |
| | மற்று | – | மற்றொருவர் |
| | ஐ | – | திருக்குறளை |

---

**சிந்தனை வினா.**

**நால்வகைச் சொற்களில் தனித்து இயங்குபவை எவை ? எடுத்துக் காட்டுகள் தருக.**

நால்வகைச் சொற்களில் தனித்து இயங்குபவை :

**பெயர்ச்சொல்:** பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

(எ.கா) பாரதி, பள்ளி, காலை, கண், நன்மை, ஓடுதல்.

**வினைச்சொல்** : செயலைக் குறிக்கும் சொல் வினைச் சொல் எனப்படும்.

(எ.கா) வா, போ, எழுது, விளையாடு.

---

**கூடுதல் வினாக்கள்–விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பெயர்ச்சொல்லுக்கு எடுத்துக்காட்டு தருக.**

அ) பள்ளி ஆ) எழுது

இ) தம்பிக்கு ஈ) மாநகரம் **விடை : அ) பள்ளி**

**2. வினைச் சொல்லுக்கு எடுத்துக்காட்டு தருக**

அ) காலை ஆ) கண்

இ) விளையாடு ஈ) தந்தையும் தாயும்

**விடை : இ) விளையாடு**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

**பின்வரும் தொடர்களில் உள்ள நால்வகைச் சொற்களை வகைப்படுத்துக.**

**1. வளவனும் தங்கையும் மாநகரப் பேருந்தில் ஏறினர்**

**விடை :**

**பெயர்ச்சொல் :** வளவன், தங்கை,பேருந்து

**வினைச்சொல் :** ஏறினர்

**இடைச்சொல் :** உம் – வளவனும், தங்கையும்

**உரிச்சொல் :** மா – மாநகரம்

**2. நாள்தோறும் திருக்குறளைப் படி.**

**விடை :**

**பெயர்ச்சொல் :** நாள்தோறும், திருக்குறள்.

**வினைச்சொல் :** படி

**இடைச்சொல் :** ஐ – திருக்குறளை

**3. ஏழைக்கு உதவுதல் சாலச்சிறந்தது என்றார் ஆசிரியர்.**

**விடை :**

**பெயர்ச்சொல் :** ஏழை, ஆசிரியர்

**வினைச்சொல் :** உதவு

**இடைச்சொல் :** கு – ஏழைக்கு

**உரிச்சொல் :** சால – சாலச்சிறந்தது

---

**4. கீழ்க்காணும் குறளில் உள்ள இடைச்சொல்லை எழுதுக.**

***மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்***
***சொற்கேட்டல் இன்பம் செவிக்கு***

**விடை :**

**இடைச்சொல் :** று – மற்று, கு – செவிக்கு

---

**செய்தித்தாளில் விளையாட்டுச் செய்தி ஒன்றைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள நால்வகைச் சொற்களை எழுதுக.**

2006 ல் கத்தார் மாநகரத்தில் ஆசிய விளையாட்டு இடைத் தொலைவு ஓட்டப் போட்டி நடைபெற்றது அதில் முதலாவது பதக்கம் வென்ற முதல் தமிழ்ப் பெண் சாந்தி என்பவர் ஆவார்.

**விடை :**

**பெயர்ச்சொல் : கத்தார், சாந்தி**

**வினைச்சொல் : ஓட்டம்**

**இடைச்சொல் : ஐ – பதக்கத்தை**

**உரிச்சொல் : மா – மாநகரம்**

---

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## இயல் ஒன்று 1.5 மொழியை ஆள்வோம்

**கேட்க. : தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவரின் வரலாற்றைக் கேட்க.**

**முன்னுரை :** இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர்களில் தென்னாட்டுத் திலகர் எனப் போற்றப்படுபவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை.

**பிறப்பும் இளமைப் பருவமும் :** 05.09.1872 ஆம் நாளில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஒட்டப்பிடாரத்தில் பிறந்தார். தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றார். சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞர் பட்டம் பெற்றார்.

**விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு :** இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் பாலகங்காதர திலகரின் தலைமையில் தம்மை இணைத்துக் கொண்டார். பாரதியார், சுப்பிரமணியசிவா ஆகிய தலைவர்களுடன் சேர்ந்து நாட்டு மக்களிடையே வீரமுழக்கமிட்டார்.

**சுதேசிக்கப்பல் :** 16.10.1906 ஆம் நாளில் ஆங்கிலேயரின் கப்பல்களுக்குப் போட்டியாக சுதேசி நாவாய்ச் சங்கம் என்ற உள்நாட்டுக் கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். அதன்மூலம் தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் இடையே கடல்வழிப் போக்குவரத்தைத் தொடங்கினார்.

**சிறைத்தண்டனை :** சுதேசிக்கப்பல் வாணிகத்தால் ஆங்கிலேயரின் கப்பல் போக்குவரத்து நலிவுற்றது. பிரித்தானிய அரசால் தேசத்துரோகி எனக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் சணல் நூற்றார், கல் உடைத்தார், மாடு போல செக்கிழுத்தார். அவர் இல்லாததால் அவர் கப்பல் நிறுவனம் நஷ்டமானதால் விற்கப்பட்டது. 1912 ஆம் ஆண்டு விடுதலையானார். பல இன்னல்களுக்கு ஆளான அவர் 18.11.1936ல் மரணமடைந்தார்.

**முடிவுரை :** நாடு விடுதலை அடைந்த பின்பு பல இடங்களிலும் அவருக்குச் சிலை எழுப்பிப் போற்றுகின்றனர். வ.உ.சி இழுத்த செக்கு நினைவுச் சின்னமாக போற்றப்படுகிறது. அவர் செக்கிழுத்தச் செம்மல் என்று போற்றப்படுகிறார்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக.**

**1.பாரதியார்.**

**உரை – செந்தில்** : வணக்கத்திற்குரிய வகுப்பாசிரியர் அவர்களே! இனிய நண்பர்களே! வணக்கம். தனது கவிதை வாயிலாக விடுதலை உணர்வைத் தூண்டிய பாரதியாரைப் பற்றிய எனது உரையைத் தொடங்குகின்றேன்.

**முன்னுரை :** இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் பாரதியார். மண் உரிமைக்காகவும், பெண் உரிமைக்காகவும் பாடியவர் பாரதியார்.

**பிறப்பு:** பாரதியார் சின்னச்சாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார்.

**இளமைக்காலம் :** பாரதியார் மதுரை சேதுபதி உயர்நிலைபள்ளியில் சில காலம் தமிழாசிரியாராகத் தொண்டாற்றினார். 1904 ஆம் ஆண்டு சுதேசமித்திரன் என்னும் இதழில் பணியாற்றினார். 1905 ல் சக்கரவர்த்தினி என்ற திங்கள் இதழைத் தொடங்கினார். விஜயா என்ற நாளிதழின் ஆசிரியராகவும் இருந்தார்.

**நாட்டுப்பணி :** பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு என்று உணர்ச்சிக் கவிதைகளைப் படைத்து விடுதலை வேட்கையை மக்கள் உள்ளத்தில் எழச் செய்தார்.

வ.உ.சி க்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை எதிர்த்து கட்டுரை எழுதினார். அதனால் ஆங்கிலேய அரசு அவரைக் கைது செய்து 34 நாட்கள் காவலில் வைக்கப்பட்டார். பின்னர் விடுவிக்கப்பட்டார்.

**முடிவுரை :** பாரத சமுதாயம் நல்வாழ்வு பெறப் பாடி உழைத்த புரட்சிக் கவி பாரதியார் 11.09.1921 ஆம் ஆண்டு தனது 39 ஆவது வயதில் அமரர் ஆனார். நன்றி வணக்கம்.

---

**2. காந்தியடிகள்.**

**உரை – சாந்தி :** வணக்கத்திற்குரிய வகுப்பாசிரியர் அவர்களே! எனது இனிய தோழிகளே! அனைவருக்கும் வணக்கம். அறப்போர் புரிந்து இந்தியாவிற்கு விடுதலைப் பெற்றுத் தந்த காந்தியடிகளைப் பற்றி என் உரையைத் தொடங்குகிறேன்.

**முன்னுரை :** "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற வள்ளுவர் குறளின்படி இவ்வுலகத்தில் வாழவேண்டிய முறைப்படி வாழ்ந்தவர் அண்ணல் காந்தியடிகள். அதனால்தான் கவியரசர் தாகூர் 'மகாத்மா' என்ற பட்டம் சூட்டி மகிழ்ந்தார்.

**பிறப்பும் இளமைக் காலமும் :** குஜராத் மாநிலம் போர்பந்தரில்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

02.10.1869 ஆம் ஆண்டு காபாகாந்திக்கும் புத்திலிபாய்க்கும் காந்தியடிகள் மகனாகப் பிறந்தார். பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்று இங்கிலாந்தில் சட்டக் கல்வி பயின்றார். பாரிஸ்டராகி இந்தியா திரும்பினார். பின்னர், தென்னாப்பிரிக்கா சென்று இனவெறியையும், நிறவெறியையும் எதிர்த்து, கறுப்பர் இன மக்களுக்கு உரிமைகள் பெற்றுத் தந்தார். 1915இல் இந்தியா திரும்பினார்.

**அரசியல் போர் :** காந்தியடிகள் ஒரே காலத்தில் இருமுனைப் போர் புரிய வேண்டியதாயிற்று. ஒன்று வெள்ளையரை எதிர்க்கும் அரசியல் புரட்சி. மற்றொன்று இந்திய நாட்டு மக்களை எதிர்த்துச் சமுதாயப் புரட்சி. இவ்விருவகைப் புரட்சிகளையும் அறவழியிலேயே செய்தார்.

**அறவழிப் போராட்டங்கள் :** ரௌலட் சட்டம் எதிர்ப்பு, ஒத்துழையாமை இயக்கம், சௌரி சௌரா போராட்டம், உப்புச் சத்தியாகிரகம், சட்டமறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் போன்றவை ஆங்கில அரசை அகற்ற காந்தியடிகள் நடத்திய அறவழிப் போராட்டங்களாகும்.

**முடிவுரை :** அறப்போராட்டங்கள் மூலம் விடுதலைப் பெற்றுத் தந்த காந்தியடிகளை 30.01.1948 ஆம் ஆண்டு கோட்சே சுட்டபோதும் சுட்டவனுக்குத் தீங்கிழைக்கக் கூடாது என்று கூறி மறைந்தார்.

---

**3.வேலுநாச்சியார்.**

**உரை – சுல்தான் :** மதிப்பிற்குரிய வகுப்பாசிரியர் அவர்களே! இனிய நண்பர்களே! முதற்கண் எனது வணக்கத்தை கூறிக்கொள்கிறேன். விடுதலைப் போரில் வெற்றி வாகை சூடிய வேலுநாச்சியார் அவர்களின் வரலாற்றைப் பற்றி இப்பொழுது உரை ஆற்ற போகிறேன்.

**முன்னுரை :** இராணி வேலுநாச்சியார் பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் சிவகங்கைப் பகுதியின் இராணி, மற்றும் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய பெண் விடுதலைப் போராட்டத் தலைவி. இவரே இந்தியாவின் முதல் பெண் விடுதலைப் போராட்ட வீராங்கனை ஆவார்.

**பிறப்பும் இளமையும் :** இராணி வேலுநாச்சியார் செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதிக்கும், முத்தாத்தாள் நாச்சியாருக்கும் ஒரே பெண் மகளாய் 1730 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் பிறந்தார். எனினும் ஆண் வாரிசு போலவே வளர்க்கப்பட்டார். ஆயுதப் பயிற்சி பெற்றார். பல மொழிகள்கற்றார். 1746 இல் சிவகங்கைச் சீமை மன்னர் முத்துவடுகநாதத் தேவருக்கு மனைவியானார்.

**திண்டுக்கல் கோட்டை :** காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் முத்து வடுக நாதர் ஆங்கிலேயர்களால் கொல்லப்பட்டார். அதனால் திண்டுக்கல் கோட்டையில் தங்கி சிவகங்கையை மீட்க உறுதி

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பூண்டார். அவருக்கு அமைச்சர் தாண்டவராயன், பெரியமருது, சின்ன மருது மற்றும் குறுநில மன்னர்கள், குயிலி, ஐதர் அலியின் படைகள் பக்க பலமாக இருந்தன.

**போராட்டங்கள் :** பெரும் போராட்டங்களை நடத்தி காளையார் கோவில் மற்றும் சிவகங்கையை மீட்ட வேலுநாச்சியார் டிசம்பர் 25, 1796 அன்று இறந்தார்.

**முடிவுரை :** வேலு நாச்சியார் பயன்படுத்திய ஈட்டி, வாள் முதலான பல பொருட்கள் சிவகங்கையில் அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன.

இராணி வேலுநாச்சியார் நினைவு தபால்தலை இந்திய அரசால் 31 டிசம்பர் 2008 அன்று வெளியிடப்பட்டது.

---

**சொல்லக் கேட்டு எழுதுக.**

இந்தியநாடு காந்தியடிகள் ஊன்றுகோல் வேலுநாச்சியார்
வாழ்த்துகள் மெய்யுணர்வு நாற்றங்கால் உரிச்சொல்
பொதுக்கூட்டம் குற்றாலம்

---

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர்களுள் ஒருவர் வ.உ.சிதம்பரனார். வ.உ.சி. அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். அவர், வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத் தன்மை பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் கப்பல்களுக்குப் போட்டியாக உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். வ.உ.சி. சென்னைக்குச் செல்லும் போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மேலும், பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்பார்.

**1. சுதேசி நாவாய்ச் சங்கத்தை நிறுவியவர் யார் ?**

**விடை:** வ.உ.சிதம்பரனார்

**2. வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது யாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் ?**

**விடை :** பாரதியார்

**3. வ.உ.சி. அவர்கள் யாருடைய பாடல்களை விரும்பிக் கேட்பார் ?**

**விடை:** பாரதியார்

**4. வ.உ.சி. அவர்களின் பன்முகத் தன்மைகள் யாவை ?**

**விடை:** வழக்கறிஞர், பேச்சாளர், எழுத்தாளர், தொழிற்சங்கத் தலைவர்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**5. வ.உ.சி. அவர்கள் புலமை பெற்றிருந்த மொழிகள் யாவை ?**
**விடை:** தமிழ், ஆங்கிலம்

---

**இடம் அறிந்து பயன்படுத்துவோம்**

1. ஒன்று என்பதைக் குறிக்க ஓர், ஒரு ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன. உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஒரு என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா) ஓர் ஊர், ஓர் ஏரி
ஒரு நகரம், ஒரு கடல்

---

2. இவைபோலவே, உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அஃது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர் மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா) அஃது இங்கே உள்ளது
அது நன்றாக உள்ளது

---

**கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

**1. ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.**
**விடை:** <u>ஓர்</u> அழகிய சிற்றூரில் <u>ஒரு</u> குளம் இருந்தது.
**2. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்.**
**விடை:** <u>ஓர்</u> இரவும் <u>ஒரு</u> பகலும் சேர்ந்தது ஒரு நாள்
**3. அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.**
**விடை:** <u>அஃது</u> இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது
**4. அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.**
**விடை:** <u>அது</u> நகரத்திற்குச் செல்லும் சாலை
**5. அது ஒரு இனிய பாடல்.**
**விடை:** <u>அஃது ஓர்</u> இனிய பாடல்

---

**அகரவரிசைப் படுத்துக.**


**பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு.**

**விடை:** பழங்கள், பாரதம், பின்னிரவு, பீலி, புதுமை, பூமி, பெண்கள், பேருந்து, பையன், பொதுக்கூட்டம், போக்குவரத்து

---

**செயல்திட்டம்.**

**காந்தியடிகளின் விடுதலைப் போராட்ட நிகழ்வுகள் பற்றிய படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.**











Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## இயல் ஒன்று

## 1.6 மொழியோடு விளையாடு

**இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்கு.**

**(எ.கா) எனக்கு எனக்குண்டு எனக்கில்லை**

**விடை :**

| | | |
|---|---|---|
| **வடக்கு உண்டு** | வடக்குண்டு | வடக்கில்லை |
| **பந்து இல்லை** | பந்துண்டு | பந்தில்லை |
| **பாட்டு** | பாட்டுண்டு | பாட்டில்லை |

கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.

| | | |
|---|---|---|
| பாரி<br>எழிலி<br>மாணவர்கள்<br>மாடு<br>மாடுகள் | வீட்டுக்கு | வந்தன<br>வந்தான்<br>வந்தது<br>வந்தார்கள்<br>வந்தாள் |

**விடை :**

★ பாரி வீட்டுக்கு வந்தான்

★ எழிலி வீட்டுக்கு வந்தாள்

★ மாணவர்கள் வீட்டுக்கு வந்தார்கள்

★ மாடு வீட்டுக்கு வந்தது

★ மாடுகள் வீட்டுக்கு வந்தன

**கட்டங்களில் மறைந்துள்ள நால்வகைச் சொற்களை எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கு | ம் | பே | சி | வ | ன் |
| ம | ர | ரு | ப | ண் | தா |
| ர | க | ந் | று | டி | ய் |
| ன் | ந | து | உ | ம் | செ |
| ஐ | மா | டு | ம | ற் | று |
| ந | ட | க் | கி | றா | ள் |

(எ.கா) குமரன் – பெயர்ச்சொல்

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**விடை :**

**பெயர்ச்சொல் –** பேருந்து, சிவன், குமரன், மாடு, வண்டி
**வினைச்சொல் –** நடக்கிறாள், செய்தான்
**இடைச்சொல் –** ஐ, உம் , மற்று
**உரிச்சொல் –** மாநகரம், உறுபசி

---

## நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள்**

★ தாய் தந்தையின் வீட்டு வேலைகளில் என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.

★ பள்ளி, பொது இடங்களில் உள்ள பொருட்களை உடைக்காமல் பாதுகாப்பேன்.

★ தமிழ்த்தாய் வாழ்த்து, நாட்டுப்பண், தேசியக் கொடி முதலியவற்றிற்கு உரிய மரியாதை தருவேன்.

---

## கலைச்சொல் அறிவோம்

நாட்டுப்பற்று–***Patriotism*** இலக்கியம்–***Literature***
கலைக்கூடம்–***Art Gallery*** மெய்யுணர்வு–***Knowledge of Reality***

---

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் ஒன்று

## 1.7 கடிதம்

**1. தெருவில் கொசு மருந்து அடிக்க வேண்டி விண்ணப்பம்**

அனுப்புநர்

த.மணிகண்டன்
66, பிள்ளையார் கோவில் தெரு,
நிலையூர்,
மதுரை – 625 005

பெறுநர்

மாநகராட்சி சுகாதார அலுவலர்,
மாநகராட்சி அலுவலகம்,
மதுரை.

ஐயா,

பொருள் : கொசு மருந்து அடித்தல் தொடர்பாக

எங்கள் பகுதி மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியாகும். பலதரப்பட்ட கூலி வேலை செய்பவர்கள் நிறைந்து இருக்கின்றனர். இங்குள்ள கால்வாய்கள் சரியாக பராமரிக்கப்படாததால் அவற்றில் சாக்கடை நாற்றத்துடன் கொசுக்கள் நிறைந்து டெங்கு, மலேரியா நோய்கள் வரும் அபாயம் உருவாகியுள்ளது.

எனவே அய்யா அவர்கள் எங்கள் பகுதி மக்கள் நல்ல சுகாதாரத்துடன் வாழ இந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு எங்கள் பகுதிக்கு கொசுமருந்து அடிக்க ஆவண செய்யுமாறு வேண்டுகிறேன்.

நன்றி

இடம் : மதுரை தங்கள் உண்மையுள்ள

நாள் : த.மணிகண்டன்

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com